# சம்மாந்துறை பிரதேச சபையின் 04 வது பொது கூட்டறிக்கை 2018.06.12

சம்மாந்துறை பிரதேச சபையின் 04 ஆவது அமர்வு 2018.06.12 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.45 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. செல்வி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப். ஏ. யூசுப் லெப்பை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப். எம் ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 04 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,சென்ற மாத கூட்டத்தின் அறிக்கையில் ஏற்பட்ட குளர்பாடு காரணமாக,சற்று தாமதமாக ஆரம்பித்ததற்கு மன்னிப்புக் கேட்டவனாக,இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும்.

இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இருந்தால்,

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே,Provincial Delimitation Reportஇல் நான் கூறிய விடயங்கள் தெளிவாக குறிப்பிடப்படவில்லை.சம்மாந்துறை மாகாணசபைத் தொகுதியில் வளத்தாப்பிட்டியில் இரண்டு கிராம சேவகர் பிரிவுகளும் நீங்கலாக சம்மாந்துறையும். காரைதீவு, நிந்தவூர், பிரதேச

சபைகள் உள்வாங்கப்பட்டவைதான் சம்மாந்துறை மாகாணசபை தொகுதியாகும்.நாவிதம்வெளி, உகனையுடன் சேர்க்கப்பட்டுள்ளது. வளத்தாப்பிட்டி அட்டாளைச்சேனையுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர்எம்.எஸ். சரீபா அவர்கள் :**
Clinic Center களுக்காக பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவு செய்ய சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது. ஆனால் நான் கூறியது,Clinic Center களுக்கு பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கும் போது RDHS உடன் கலந்தாலோசித்து வழங்குவது சிறந்ததாக இருக்கும் என்பது எனது கருத்து அது இங்கு குறிப்பிடப்பட வில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:.**
நீங்கள் கருத்துத் தெரிவித்ததாக குறிப்பு இருந்தது. ஆனால் Recordingஇல்லை. Clinic Centerசட்டபூர்வமாக சபையின் நிர்வாகத்தில் வரவேண்டும். ஆனால் நடைமுறையில் MOH Office க்கு போகின்றது. Clinic Centerக்கு சபையினால் வளங்களைக் கொடுப்பதில் தடையில்லை.

சில இடங்களில் தேவை இருக்கலாம். அப்படி இருந்தால், அதனை நியாயப்படுத்தி செய்வதற்காகத்தான் இந்தப் பிரேரனை எடுக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர்எம்.எஸ். சரீபா அவர்கள் :**
Clinic Centerகளுக்குகதிரைகள் தேவையென்றால் சுகாதார வைத்திய அதிகாரி Request கடிதம் தரத்தானே வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:.**
சுகாதார வைத்திய அதிகாரியும் தரலாம், பொது மக்களும் தரலாம். சுகாதார வைத்திய அதிகாரி கவனத்தில் கொள்ளாவிட்டாலும், நாம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

இந்த அறிக்கையை திருத்தத்தோடும். கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களின் கருத்துக்களையும், கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி திருத்துவதற்கு பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் 01**

சென்ற மாதக் கூட்டறிக்கையினை திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

சென்ற சபைக் கூட்டத்தில் இருந்து இன்று வரைக்கும் தவிசாளர் என்ற ரீதியில் சில கருத்துக்களை உங்களுடன் பரிமாரிக் கொள்ள வேண்டும்.

**திண்மக்கழிவு அகற்றல்:**இது சம்மாந்துறைக்கு ஒரு பாரிய சவல். இன்னும் எமக்கு சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் உட்பட்ட பகுதிகளை முழுமையாக உள்ளடக்கக்கூடிய வசதிகள் இல்லை. அதாவது கடந்த காலங்களில் 2014 ஆம் ஆண்டில் இருந்து நாம் கழிவுகளை நேரடியாக ஆலங்குழத்திற்கு அனுப்புவதனால் பாரிய செலவும், பாரிய பின்னடைவும் ஏற்படுகின்றது.

ஒரு நாளைக்கு ஒரு Tractor 02 தடவைதான்செல்ல முடிகின்றது. இதனால் டயர், மிசின் Wastage ஆகின்றது. அதற்கு அப்பால் Compost yardஆரம்பித்தும் சரிவர செயற்பட வில்லை.

நாம் சபையைப் பாரமெடுக்கும் போது, நீங்கள் அனைவரும் என்னிடம் ஊரின் நிலமை பற்றி கூறியிருந்தீர்கள். சில இடங்களில் திண்மக்கழிவு அகற்றுவதற்கு கிழமைக்கு மேல் சென்றுள்ளது. ஆனால் நாங்கள் மீண்டும் காரைதீவு சபையுடன் பேசி அவர்களின் உதவியுடன், சென்ற 03 கிழமைகளாக Tractorமட்டும் காரைதீவிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.Dump Truck உம் Compactor உம் ஆலங்குழத்துக்கு அனுப்பி ஓரளவு ஊரின் நிலவரத்தை மாற்றியுள்ளோம்.

ஆனால் அதனை காரைதீவு சபைக்கு கொடுப்பதாக இருந்தாலும் ஒப்பிட்டுப் பார்கும் போது ஏறத்தாள ஒரு தொன்னுக்கு 100 அல்லது 150 ரூபாவில் மாற்றம் வருகின்றது. அனால் சபை என்பதனால் அதற்கு நிதி பிரச்சினை இல்லாவிட்டாலும்,நாம் அதனை தொடர்ந்து செய்ய முடியாது. இதற்கு அங்கத்தவர்களின் உதவியும் வேண்டும்.

முதலாவதாக கழிவினைக் கட்டுப்படுத்துவதற்கு உக்கக்கூடியது, உக்காதது என்று தரம் பிரிக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக எமது ஊர் மக்களின் பழக்கம் வளவுக் குப்பைகள் எல்லாவற்றையும் Tractorகுள் போடுவது.

இவைகள் பற்றி மக்களுக்கு விளிப்புணர்வூட்ட வேண்டும். ஏனென்றால் திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு பாரிய செலவு ஏற்படுகின்றது. அதே நேரம் செந்நெல் கிராமம் 01, 02 வளத்தாப்பிட்டி, மல்வத்தை மக்கள் எல்லோரும் ஏன் இந்த சேவை எங்களது பிரதேசங்களுக்கு வழங்குவதில்லை என்றுநம்மிடம் கேட்கின்றார்கள். இதனைக் கட்டுப்படுத்தாவிட்டால் பாரிய பிரச்சினையாக இருக்கும்.

நான் கௌரவ உள்ளூராட்சி அமைச்சரிடம் 02 Compactorகளும் 03TractorTrailerகளும் கேட்டு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன் ஒரு Compactorஆவது தருவேன் என்று ஒரு வாக்குறுதி தந்துள்ளார். அப்படி கிடைத்தால் நமது சுமையைக் குறைக்கலாம்.

நமது ஊர்பாரிய பிரதேசமாக இருந்தும் திண்மக்கழிவினைக் கொட்டுவதற்கு ஒரு இடம் இல்லை. அதனைManage செய்வதற்கு ஒரு Dumping Yard இல்லை. நாம் மக்கள் மத்தியில் கழிவுகளைக் குறைப்பதற்கான ஒரு விளிப்புனர்வு நிகழ்வு நடாத்தப்பட வேண்டும். ஏனென்றால் இந்த மாதம் றமழான் மாதம் என்பதனால் அதிகமான பிளாஸ்டிக் குப்பைகள் வருகின்றது. காரணம் இப்தார் நிகழ்வுகள் நடப்பதனால். இன்று கூட மகாவித்தியாலையத்தில் அதிகமான பிளாஸ்டிக் குப்பைகள் எடுக்கப்பட்டுள்ளது. இப்படியான நிகழ்வுகளில் வருகின்ற கழிவுகளை அகற்றுவதற்கு கட்டனம் எடுக்க வேண்டுமா? என்ற ஒரு நிலையும் வரலாம். இதற்கு ஒவ்வொரு அங்கத்தவர்களும் அந்தந்த வட்டாரத்திற்குள்ளும், பட்டியல் வேட்பாளர்கள் பொதுவாக எல்லா இடங்களிலும் ஒரு விளிப்புனர்வூட்டும் நிகழ்சி செய்வதோடு, நோன்பு முடிந்ததும் Composet Bin வாங்கிக் கொடுப்பதனையும் ஆரம்பிக்க வேண்டும்.

**Development Works:-** அங்கத்தவர்கள் அனைவரும் Estimatesகேட்டு உங்களது வேண்டுகோள்களைத் தருகின்றீர்கள்.சென்ற மாதம் ஏறத்தாள 20,000.00 ரூபா Stationery க்கு மட்டும் செலவாகியுள்ளது.100 க்கும் மேற்பட்ட Estimatesகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த தேர்தல் முறையில் வட்டாரத்திற்குப் பொறுப்பான அங்கத்தவர்கள், பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் நீங்கள் அனைவரும் அபிவிருத்தி வேலைகளை முன்மொழிகின்றீர்கள் அந்தந்த வட்டதரத்தின் அங்கத்தவர்களையும் உள்வாங்கியதாக இடங்களை உள்வாங்கினீர்களேயானால் நடைமுறைச் சிக்கல்கள் வராது. இதற்கு எவரும் தடையில்லை.

என்னைப் பொறுத்தமட்டில் ஊரின் அபிவிருத்திக்கு அங்கத்தவர்கள் தடையாக இருந்தால் நான் அதில் தலையிட்டு சமரசம் பேசுவதற்கு தயாராக உள்ளேன். ஆனால் அவர்களும் இதற்குள் உள்வாங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்த மாற்றத்தில் அர்த்தம் இருக்காது. பொதுவான விடயங்கள் இருந்தாலும் அந்தந்த வட்டாரங்களில் நாம் ஒரு அபிவிருத்தித் திட்டத்தினை முன்மொழிவோமானால் அவர்களையும் உள்வாங்கியதாக செய்யும் போது, சில நேரங்களில் நீங்கள் ஒரு வட்டார உறுப்பினர்Request தருகின்றீர்கள், ஆனால் ஏற்கனவே ஒரு பட்டியல் உறுப்பினர் Estimatesசெய்து எடுத்துவிட்டார் என்ற கருத்து முரண்பாடுகள் வரக்கூடாது. அப்படி ஏதாவது பிரச்சிகைள் ஏற்படுமானால் அப்பிரச்சினைகளுக்கு நான் முன்னின்று செயற்படுவேன்.நமக்குள் போட்டி தேவையில்லை. நான் ஆரம்பத்தில் கூறியவாறு இந்த சபையைப் பொறுத்தமட்டில் நான் இந்த சபையில் இருக்கும்வரை கட்சி பேதத்திற்கு அப்பால் நான் எவரையும் போய் சந்திப்பதற்கு தயாராக உள்ளேன்.

சென்ற கிழமை நமது ஊரைச் சேர்ந்த Doctor இஸ்மாயில் அவர்கள் தேசியப்பட்டியலில் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.அவரை இந்த சபையின் சார்பில் வாழ்துகின்றேன். நமது ஊரின்,திகாமடுள்ள மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும், தேசியப் பட்டியலில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் 02 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இவர்களை நாம் பிரித்து ஆளாமல்எல்லோரையும் உள்வாங்கி சம்மாந்துறை பிரதேச சபை சம்மாந்துறையின் அபிவிருத்தியை நோக்கி பயணிக்கும் ஒரு சபையாக முன்னுதாரணமான நாம் நடக்க வேண்டும்.

இந்த சபையின் வளங்கள் ஒரு போதும் அரசியலுக்காக வழங்கப்படமாட்டாது. அந்த உறுதியை ஆரம்பத்திலேயே நான் கூறியிருக்கின்றேன். நான் ஒரு கட்சியைச் சார்ந்தவனாக இருந்தாலும், அரசியலுக்காக சபையின் வளங்கள் பாவிக்கப்படமாட்டாது. சபையின் வளங்களை பாவிக்க வேண்டுமானால் அதற்குரிய கட்டணங்களை செலுத்தி அனுமதிகள் வழங்கப்பட வேண்டுமே தவிர,அரசியலுக்காக இந்த சபையின் வளங்கள் பாவிக்கப்பட மாட்டாது. அதுபோல்,Development வேலைகளை செய்யும் போது உறுப்பினர்களுக்கிடையே கலந்துரையாடல் செய்து கொள்ளுங்கள்.

UDAவினால் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.அதாவது தொடர் மாடிகள், சுற்றாடல் மாசடையும் (மில், குவாரி, பெற்றோல் செட்)போன்றவைகள் மேலும் காணிகளை பிரிவிடுவது, புன்னிய பூமிகளை அபிவிருத்தி செய்தல், இணங்கன்ட - இணங்கானக்கூடிய பெறுமதியுள்ள காணிகள் போன்றவற்றுக்கு சபை அனுமதி வழங்க முடியாது என்றும், அவைகளுக்கு UDA தான் அனுமதி வழங்க வேண்டும் என்றும்,ஒரு சுற்றறிக்கை வெளியிட்டிருக்கின்றார்கள். நான் இதனை உங்களுக்கு தகவலுக்காக தெரிவிக்கின்றேன். இதன் பிரதி தேவைப்பட்டால் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

நோன்பு முடிந்ததும் சபையினால் உறுப்பினர்கள் அனைவரினதும் ஆதரவோடு மரம் நடும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். மக்களுக்கு பிரயோசனமளிக்ககூடிய மரங்களை சபையினூடாக நடுவதற்கு ஆரம்பிக்க வேண்டும்.

**Road Inventory, பெயர் பலகை:-** சென்ற சபையிலும் சில அங்கத்தவர்கள் பாரமெடுத்தும் அதனை செய்து முடிக்க வில்லை. அதாவது இந்த சபையின் எல்லைக்குள் வருகின்ற பாதைகளுக்கு பெயர்களை இடும் உரிமை நமக்கு இல்லை. Road Inventory செய்து மாகாண சபைக்கு அனுப்பி அதன் பிறகு கெசட் வெளிவரவேண்டும். அதனை உத்தியோகத்தர்கள் மட்டத்தில் விடாமல், அங்கத்தவர்களும் அந்தந்த வட்டாரத்தில் உள்ள முக்கியத்தவர்களை உள்வாங்கி இந்த வேலையை ஆரம்பிக்க வேண்டும்.

இந்த சபையில் அதன் விபரங்கள் 80 வீதமாக இருக்கின்றது. அதற்கு குழு ஒன்றினை உருவாக்கி ஒவ்வொரு குறிச்சாக, ஒவ்வொரு வட்டாரமாக ஒழுங்கு முறையில் செய்து வருவோமேயானால் 06 மாத காலத்திற்குள் இதனை பூர்த்தி செய்ய முடியுமானதாக இருக்கும்.

சிலருக்கு பழைய பெயர்களைக் கேட்பதற்கு விருப்பமில்லாமல் இருக்கலாம். ஆனால் அவைகள் ஒரு சரித்திரத்தோடு தொடர்பானதாக இருக்கும். அதனை நாம் புறக்கனிக்கவும் முடியாது. எனவே ஒரு விரிவான முறையில் பார்த்து நாம் பட்டியலை உருவாக்கி, அதற்கு பொது மக்களின் அபிப்பிராயத்தையும் பெற்று வெளியில் ஆட்களை கொண்டு வந்து ஆலோசனைகளைப் பெற்று பொதுவான முடிவிற்கு வந்து அதனை செயற்படுத்த வேண்டும். இதனை இந்த சபை இருக்கும் காலத்திற்குள், மிக விரைவில் குறைந்தது ஒரு வருட காலத்திற்குள்ளாவது முடிக்க வேண்டும்.இனிவரும் காலங்களில் Road Inventoryஇல்லாததால், சட்டப் பிரச்சினைகளும் ஏற்படலாம்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினருடன் DS Office இன் மூலம் அபிவிருத்தி வேலை செய்வது தொடர்பாக கருத்து தெரிவிக்கின்ற போது, அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.அப்போது நான் கூறினேன் நீங்களும் தவிசாளராக இருந்தவர். என்ன செய்யலாம், என்ன செய்ய முடியாது என்று உங்களுக்குத் தெரியும். சட்டத்தில் இருக்கும் ஒரு நெகிழ்வுத் தன்மையைப் பாவித்து ஊரின் அபிவிருத்தியை தடுப்பதற்கு நான் தயாரில்லை. அதனால் சபையையும் மதித்து அபிவிருத்தி வேலைகளை செய்வது நல்லது என்று கூறியிருந்தேன்.

**முகைடீன் Clock Tower:-** அதில் மாற்றங்கள் செய்வதற்கு நான் Estimatesஎடுத்திருக்கின்றேன். அதனை நான் வெளியில் இருந்தும், கௌரவ அமைச்சர்களிடமும் பேசியிருக்கின்றேன். யாரிடம் இருந்து One million Allocation வருகின்றதோ அதனைப் பாவித்து Clock Tower செய்யப்படும்.ULM.முகைடீன் ஞாபகார்த்த சின்னமாக அது விளங்க வேண்டும் என்று சபையினால் எடுத்த தீர்மானம். இதற்கு சபையில் வளங்கள் இல்லை.அதனை உங்களுக்கு அறியத்தருகின்றேன்.

**ஆளணி:-**இந்த சபைக்கு பாரிய பிரச்சினை. இந்த சபையினை ஒழுங்கு முறையில் கொண்டு செல்வதற்கு ஆகக் குறைந்தது 150 அல்லது 160 பேர் வேண்டும். காரியாலைய வேலைகளைச் செய்யும் அளவுக்குத்தான் லேபர் காடர் இருக்கின்றது. லேபர் காடர் 02 அல்லது03 மடங்காவது இருக்க வேண்டும். அப்போதுதான் அதனைச் செய்யலாம்.

சென்ற கிழமை Finance Minstry இல் Management Service இல் சேவையாற்றும்Mr.கோபால றட்னம். இவர் DS ஆக இருந்தவர். அவர் தற்பொழுது இந்தப்பகுதிக்கு பொறுப்பாளராக இருக்கின்றார். அவர் சம்மாந்துறை பிரதேச சபைக்கு விசேடமாக உதவி செய்வதாக வாக்குறுதி தந்திருக்கின்றார். அதனையும் வருங்காலத்தில் நாம் செய்வோம். அந்த முயற்சியில் நான் ஈடுபட்டிருக்கின்றேன் என்று கூறியவனாக,

நான் கூறியவற்றில் கௌரவ உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிப்பதென்றால் கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, வீதிக்கு பெயரிடுவது சம்பந்தமாக முதலாவது கூட்டத்திலேயே வேண்டுதல் விடுத்திருந்தேன். பெயர்களை பிரேரிப்பதற்காக வெளியில் இருக்கின்ற சில பாண்டித்தியம் பெற்றவர்கள், வயதுமிக்கவர்கள், அனுபவசாலிகள் போன்றவர்களை உள்ளடக்கிய ஒரு குழுவைப் பிரேரித்து அவர்களுக்கு கால அவகாசம் வழங்கி குறிப்பிட்ட காலத்திற்கு உங்களது ஆலோசனைகளை முன்வையுங்கள் என்று கூறி ஒரு குழுவை அமைத்தால் மிகவும் ஆரேக்கியமாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நானும் அதனை யோசித்தேன். இவை வட்டாரம் என்று இருப்பதனால் ஒவ்வொரு வட்டாரத்திற்குள்ளும் இருக்கின்ற அங்கத்தவர்களின் தலைமையில் அந்த வட்டாரத்திற்குள் இருக்கின்றவைகளை Proposal களாக எடுத்து, அதற்குப் பின் ஒரு ஆலோசனைக் குழுவைக் கூட்டி அதனை சமர்ப்பித்து ஆலோசனை வழங்கினால் உறுப்பினர்களுக்கும் பொறுப்பு வரும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறியது நல்ல ஆலோசனை. அங்கத்தவர்கள் தருகின்ற ஆலோசனைகளையும் சமர்ப்பித்து, இறுதியாக தருகின்ற முடிவை இந்த சபையிலே பிரேரித்து ஆமோதிப்பதுநன்றாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். உங்களுக்கும் அதில் பங்கு இருக்கின்றது. அங்கத்தவர்களும் உங்கள் வட்டாரத்திற்குள் இருக்கின்ற முதியவர்கள்,GS's,ஓய்வு பெற்றவர்கள்,போன்றவர்களைக் கூட்டி உங்களது வட்டாரத்தின் படத்தை எடுத்து,நீங்கள் எதனை முன் மொழிகின்றீர்கள் என்று, அதனை ஒழுங்கு படுத்தி எடுப்பீர்களேயானால், அதன் பின்னர் நாம் ஒரு நிபுனத்துவம் பெற்ற குழுவோடு ஆலோசித்து, அதன் பிறகு சபையில் கொண்டு வந்து தீர்மானம் எடுத்து நிறைவேற்ற வேண்டும்.ஆனால் இதனைஒரு வருட காலத்திற்குள்ளாவது முடிக்க வேண்டும்.

இந்த ஊரில் 375 ற்கு மேற்பட்ட பாதைகள்இருக்கின்றது. இதில் சில பாதைகள் உறுதியினால் விடப்பட்ட பாதைகள். அவைகள் PrivateProperty. அவைகளை சட்ட பூர்வமாக நாம் Inventyக்குகொண்டு வருவதென்றால், அந்தப் பாதையில் வாழ்பவர்கள், அதற்கு சொந்தக்காரர்கள் எல்லோரும் சபைக்கு சட்ட பூர்வமாக எழுதி பாரம் கொடுக்க வேண்டும்.

தயவு செய்து இன்றிலிருந்து தொடர்வதற்கு வட்டாரத்திற்குரிய அங்கத்தவர்கள், உங்கள் வட்டாரங்களில் பட்டியல் அங்கத்தவர்கள் இருப்பார்களேயானால், அவர்கயைும் உள்வாங்கி அறிவுரை விடுத்தது போல் உங்கள் வட்டாரத்தில் உள்ள GS's, ஓய்வு பெற்றவர்கள், போன்றவர்களையும் உள்வாங்கி 03 மாத காலத்திற்குள் அதனை முடித்துத்தாருங்கள்.

**கௌரவ உறுப்பினர்ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் இதற்கு முதல் ஒரு குழுவை அமைத்தீர்கள். அந்தக் குழுவிற்கு நானும் ஒரு அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருந்தேன். 100 க்கு மேற்பட்ட வீதிகளுக்கு பெயர்கள் வழங்கினோம். அதில் ஒருவர் மரணித்தும் விட்டார். முஸ்தபா மாஸ்ட்டர். தற்போது இந்த வட்டாரத்திற்குள் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்று வருகின்ற போது சிலர் இளைஞர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு சில சரித்திரங்கள் தெரியாமலும் இருக்கலாம்.

நமது ஊரைப் பொறுத்தவரையில் றாசிக் மாஸ்டர், யாஸீன் மாஸ்ட்டர், இணக்க சபையில் இருக்கின்ற வயது முதிர்ந்த அங்கத்தவர்கள் போன்றவர்களுக்கு இந்த ஊரின் சரித்திரம் நன்றாகத் தெரியும். எனவே எமது கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது போல், அப்படியான ஓர் உயர் சபை அமைத்து, அங்கத்தவர்களோடு எங்களது ஆலோசனைகளையும் வழங்கி எங்களதுகாலத்திற்குள் இதனை செய்ய வேண்டும்.

சிலர் சமூகத்திற்கு உழைத்தவராக இருப்பார்கள். ஆனால் அவர்கள் படித்தவராக இருக்க மாட்டார்கள். அவர்களின் பெயர்களும் உள்வாங்கப்பட வேண்டும். அதிகமான மக்கள் இந்த

ஊருக்காக சொத்துக்களைக் கொடுத்து விட்டு இறந்துள்ளார்கள். இவர்கள் இந்த ஊருக்கு வழங்கிய சேவைக்காக அவர்களது ஞாபகார்தமாக சில வேலைகளைச் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல நீங்கள் கூறியது போல் ஒரு பிரதேசத்தில் ஒரு உறுப்பினர்தான் தெரிவு செய்யப்படலாம். ஆனால் தேர்தல் முறையில் ஏற்பட்ட ஒரு விடயம்தான் இந்தத் தேர்தலில் எந்த மக்களுக்கும் தேல்வி இல்லை. மக்கள் அளித்த வாக்கின் அடிப்படையில்தான் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். உதாரணத்திற்கு எனது சீட்டை எடுத்துக் கொண்டாலும் எனது இடத்தை வென்றவர் 1400 வாக்கு என்றால் அதற்கு எதிராக எனக்கும், மற்றவருக்கும் அளித்த வாக்குகள் 2000 திற்கு மேற்பட்டதாக இருக்கும். எனவே 2000 க்கு மேற்பட்டவர் அந்த சீட்டிற்கு எதிராக வாக்களித்துள்ளார்கள். 1400 வாக்குப் பெற்று வருகின்ற சபை முழுமையான சபையாக இருக்காது. ஏனென்றால் எனது சீட்டை பார்க்கின்ற போது சபை அமைவதில் அதிகமானோர் வெளியில் இருக்கின்றார்கள். அதற்காக ஏற்பட்ட மாற்றத்தினால்தான் நாங்கள் உள்வாங்கப்பட்டு இந்த சபையில் இருக்கின்றோம்.

இந்த சபையில் எங்களுக்கு சுமார் 05 வாக்குகள் குறைவாக இருந்தும் 7000 பேருக்கு 02 அங்கத்தவர்கள் தான் வெற்றியடைந்தார்கள். மற்ற 5000 பேருக்கும் நாங்கள் 02 பேர்தான் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றோம். எனவே இந்த சபை உள்வாங்க வேண்டியது, நாங்கள் இரண்டு பேரும் வாக்கு பெற்றதில் குறைவாக இருந்தாலும், 5000 பேருக்கும் நாங்கள் இரண்டு பேரும்தான் பதில் கூற வேண்டும். எனவே எங்களது பெறுமானம் 5000 மக்கள் அதே நேரம்பட்டியல் மூலம் தெரிவானவர்கள்என்பது அளிக்கப்பட்ட வாக்கின் அடிப்படையில் தான் வழங்கப்பட்டிருக்கின்றது.ஒரு தாய் எல்லாப்பிள்ளைகளையும் பெறுவதில்லை. அதே போன்று, ஒருவர்தான் ஒரு சீட்டில் வெல்லலாம். இந்த சபையில் இருப்பவர்கள் இந்த தேர்தல் முறையினை விளங்கியிருக்க வேண்டும். ஏனென்றால் தனியான ஒரு கட்சி வென்று ஆட்சியமைப்பதென்றால் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிறஸ் 100 மேலதிக வாக்குகள் எடுத்தது. பழைய முறை என்றால் அவர்களுக்கு போனஸ் வந்திருக்கும். ஆனால் அது அப்படியில்லை. வழங்கப்பட்ட வாக்கின் மூலம் நாங்கள் இரு கட்சிகளும் சேர்ந்து சபையை நடாத்துகின்றோம்.

அதே நேரம் பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட நாங்கள் பொதுவான வட்டாரத்திற்குள் நாங்களும் சேவைகளைச் செய்கின்ற நேரத்தில், இந்த சபையில் இருக்கின்ற உறுப்பினர்களும் எங்களை விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்களை நாங்கள் தவிர்த்து செய்ய முடியாது. அவர்களுக்கும் முன்னுரிமை அளித்து நாங்களும் சம்மாந்துறையில் உள்ள 10 வட்டாரத்தில் எந்த வட்டாரத்திற்குள்ளும், எங்களுக்கான நிதியை எடுத்து வந்து உங்களுடன் சேர்ந்து, எமது ஊருக்குரிய அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

உங்களுக்கு நன்றாகத் தெரியும் தவிசாளர் அவர்களே,சென்ற முறை மோட்டார்சைக்கிள் வழங்கப்படுகின்ற நேரம் ஐக்கிய தேசியக்க கட்சி உறுப்பினருக்காகவும் போராடி ஒரு மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொடுத்தோம். அந்த நேரம் நாங்கள் அவரை ஐக்கிய தேசியக்க கட்சி உறுப்பினர் என்று அவரை ஒதுக்கிவிட வில்லை. அதே போன்றுதான் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் என்ற வேறுபாடு எங்களுக்குள் வரக்கூடாது. அவர்களின் ஒத்துளைப்புடன் இங்கு எடுக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். எனவே நாங்கள் இதனை சம்மாந்துறை பிரதேச சபையாகவே நினைக்க வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் சம்மாந்துறைக்கு தேசியப்பட்டியலின் மூலம் புதிதாக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கிடைக்கப்பெற்றுள்ளதென்று கூறியிருந்தீர்கள். அவரும் நன்கு கற்றறிந்த கல்விமான் என்ற வகையில் அவரையும்,பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உருப்பினரும் இருக்கின்றார். அவரையும் சேர்த்து எமது கௌரவ தவிசாளர் அவர்கள் மூன்று பேரும் இணைந்து விடப்பட்ட சில விடயங்களை உதாரணமாக தொழில் வாய்பில்லாமல் கஸ்டப்படுகின்ற மக்களுக்கு,இவ்வூரில் 3000 போர் தொழில் செய்யக்கூடிய பாரிய நிறுவனத்தை உருவாக்கி, இச்சந்தர்ப்பத்தினை முழுமையாகப் பயன்படுத்தி, தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற வேலைகளை செய்யமுடியும்

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் சுருக்கமாகப் பேசியதை நீங்கள் மிகவும் விளக்கமாக பேசியதற்கு நன்றி.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே,நாங்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் 03 பேர். ஜனாதிபதி அவர்கள் தேர்தலில் போட்டியிட்ட அனைவருக்கும் வட்டார அபிவிருத்திக் குழு தலைவர் என்ற பத்திரம் வழங்கியுள்ளார். அவர்கள் ஜனாதிபதியிடமோ அல்லது ஏனைய சில அமைச்சர்களிடமோ சென்று உதவிகளைப் பெற்று வர முடியும்.நாங்கள் தேர்தல் காலங்களில் மக்களுக்கு வீதிகள் அல்லது அவர்களது தேவைகளை பூர்த்தி செய்து தருவதாகவும் வாக்குறுதியளித்துள்ளோம். அந்த சந்தப்பத்தில் அதனை மற்றவர்கள் தடுக்க முடியாது.

எங்களுக்கு வட்டாரம் இல்லை.நாங்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைபாளர்கள். சம்மாந்துறைக்காக கொண்டு வருகின்ற வளங்களை சகல இடங்களிலும் பிரயோகிக்க வேண்டும். இந்த வட்டாரம் எனக்குரியது என்று கூற முடியாது. சம்மாந்துறையில் எந்த இடத்தில் வேலை செய்ய வேண்டுமோ அந்த அந்த இடத்தில் வேலை செய்வதற்கு மற்றவர்கள் தடைசெய்யக் கூடாது. அவர்களும் சேர்ந்து எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாங்கள் வாக்குறுதியளித்த வீதிகள்,வாக்குறுதியளித்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல எந்தத்தடையும் இருக்கக்கூடாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, நான் அதனை தெளிவாகக் கூறினேன். இதில் போட்டியில்லை. ஆனால் இனங்கானும் போது அவர்களையும் உள்வாங்குங்கள் என்றுதான் கூறினேன். ஒருவர் தடையாக வரும் போது நான் தலையிடுவேன் என்றும் கூறினேன். தவிசாளர் என்று இருப்பது இப்படியான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காகத்தான். எதிலும் தடையில்லை. ஆனால் நாம் எல்லோரும் மனிதர்கள். எல்லோருக்கும் எல்லா விருப்பங்களும் இருக்கின்றது.நாம் எல்லோரும் ஒரு சபையின் அங்கத்தவர்கள். எல்லா அமைச்சர்களுக்கும் நான் இனைப்பாளர் என்று கூறலாம். ஏனென்றால் நான் எல்லோரையும் சந்திக்கக்கூடியவன். நமக்குள் போட்டி வராமல் குறித்த வேலைத்திட்டங்களை செய்யுமாறே கூறினேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபையின் மிக முக்கியமான விடயம் அபிவிருத்திகள், அதன் அடிப்படையில் நீங்கள் கூறிய கருத்தை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றேன். ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தில் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி சம்மாந்துறை தொகுதிக்கான கட்சியின் அமைப்பாளராக என்னை நியமித்திருக்கின்றார்கள். அதன் படி நான் இந்த அரசாங்கத்தினூடாக அதிகமான விடயங்களை,அதனுடன் சம்பந்தப்பட்டு இந்த சபைக்குக் கொண்டு வந்து, சபையூடாக நிறைவேற்றுவதற்கு சில முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றேன்.

அலரிமாளிகையில் இடம் பெற்ற இப்தார் நிகழ்விற்கு சென்ற போது, கட்சியின் தற்போதைய தவிசாளரும் முன்னால் செயலாளருமான கௌரவ அல்ஹாஜ்கபீர் ஹாஸீம் சேர் அவர்கள் மிகவும் விணயமாகக் கேட்டுக் கொண்ட விடயம்.அவசரமாக One Million அடிப்படையில் 06 பாதைகளை இன்றோ அல்லது நாளையோ தந்துவிட வேண்டும் என்று கேட்டிருந்தார். நானும் எனது சொந்த வேலைகளை விட்டு விட்டு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தேன். சம்மாந்துறையில் செய்யப்பட வேண்டிய பாதைகளை சபையில் இருக்கின்ற உத்தியோகத்தர்களின் உதவியோடு நான் அதனை அவசரமாக மேற்கொன்டேன். ஆனால் நீங்கள் கூறியவாறு நானும் எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்வேன். எமது அரசாங்கத்தினூடாக இந்தத் தொகுதிக்கான அபிவிருத்தித் திட்டங்களையும் இறக்காமம் பிரதேச சபைக்கும் சேர்த்து முன்மொழிந்திருக்கின்றேன். அனைத்து வேலைகளையும்

தவிசாளரின் அனுமதியுடன் தொடருவேன். அமைச்சின் பட்டியலில் 15 பாதைகள் பஸார் வீதி, சென்றல் வீதி போன்ற முக்கியமான பாதைகளைஏற்றுக் கொண்டுவிட்டார்கள். எந்தக் கட்சி உறுப்பினர் என்ற பேதம் பாராமல் வெளிப்டையாக முன்னெடுக்க தயாராகவும் உள்ளேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நன்றி உங்களை சபையின் சார்பாக வாழ்தியவனாக,இந்த சபையில் பேசும் போது இன்னொரு அங்கத்தவர் கூறியதாக பேசக்கூடாது.அது மரபில்லை. உங்களது கருத்துக்களை முன்வைக்கலாம். இது சபையின் சம்பிரதாயத்திற்கு ஆரோக்கியமானதில்லை. அடுத்த கட்டமாக முன்மொழிவுகளைப் பார்கலாம்.

**தீர்மானம் 02**

சென்ற மாதம் 01.06.2018 தொடக்கம் 30.06.2018 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அங்கீகாரம் வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 03**

எதிர்வரும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு 12.06.2018 தொடக்கம் 19.06.2018 வரையான நாட்களுக்கு ஹிஜ்றா சந்தி, மணிக்கூட்டுக் கோபுரம் மற்றும் அப்துல் மஜீட் பொது மண்டப முற்பகுதி அலுவலகம், சிறுவர் பூங்கா (அமீர்அலி) என்பவற்றை மின் விளக்குகளால் அலங்கரிப்பதற்கு இச்சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம். றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 04**

உக்காத கழிவுகளை தரம் பிரித்து பொது மக்களிடம் இருந்து பெறுவதற்காக பிளாஸ்டிக் குப்பை கூடைகள் கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**தீர்மானம் 05**

பிரதேச சபை அலுவகலத்தின் wifi முறையினைச் சீராக்கி Cable இணைப்பை சீரமைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**தீர்மானம் 06**

தபால் தொடர்புகளுக்கான முத்திரைக்கு ஒதுக்கப்பட்ட 3.000.00 ரூபாவை 5,000.00 ரூபாவாக அதிகரித்து வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. யூசுப் லெப்பை |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

**தீர்மானம் 07**

அலுவலகம் மற்றும் நூலகங்களின் பாவனையில் உள்ள கனணி மற்றும் பிறின்டர்களினை ஒரு வருடத்திற்கு Service Agreement செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கு உத்தேச மதிப்பீட்டு விலை குறிப்பிடப்படவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை செயலாளர் அவர்கள் FA இடம் கேட்டு கூறுங்கள்.

**தீர்மானம் 08**

PSDG திட்டத்தின் மூலமாக மாகாண சபையினால் One millionரூபா ஒதுக்கப்பட்ட நிதியில் பொது நிறுவனம் மற்றும் பொது இடங்களில் வைப்பதற்காக 04 நிறத்தினாலான பிளாஸ்டிக் குப்பை கூடைகளை கொள்வனவு செய்துபொருத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**தீர்மானம் 09**

பொதுச் சந்தைக்கான PSDG திட்டத்தின் மூலமான புணரமைப்பு பணிகளை தொடர்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்குின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம். இன்பவதி |

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே,ஹிஜ்றா பொதுச் சந்தை திருத்தப்பட வேண்டும். அதே நேரத்தில் மல்வத்தை பொதுச் சந்தையையும் திருத்த வேண்டும். கடைத்தொகுதிகள் அனைத்தும் உடைந்து மழைகாலங்களில் அதற்குள் நீர் வருவதாக பாரிய முறைப்பாட்டினைக் கூறுகின்றார்கள்.எமது வரி அறவீட்டாளர்கள் வரியை அறவிடச் சென்றால் அவர்களுக்கு தகாத வார்தைகளால் ஏசி அனுப்புகின்றார்கள். எனவே மல்வத்தைச் சந்தியில் உள்ள எமக்குச் சொந்தமாக கடையறைகளை திருத்துவதற்கும் உள்வாங்கினால் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதனை செயற்திட்டமாக நீங்கள் சமர்ப்பியுங்கள். இந்தப் PSDG வேலைகள் சபை உருவாகுவதற்கு முன் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள். அதனை செயற்படுத்துவதற்கு சபை அங்கீகாரமாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

உங்களுக்கு தெரியுமோ தெரியாதோ, உங்களுக்கென்று, உறுப்பினர்களுக்கென்று ஒரு அறை உள்ளது. அதற்குள் computer உம் Printer உம் கொள்வனவு செய்து, உங்கள் பாவனைக்காக வைப்பதற்கு உங்கள் அனுமதி வேண்டும்.

**தீர்மானம் 10**

கௌரவ உறுப்பினர்களின் அலுவலக அறையில் ஒரு கனணி, பிறின்டர் என்பவற்றை வைத்து, அவர்களின் பணிகளை ஆற்ற வசதி செய்து கொடுப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.யூசுப் லெப்பை |

**கௌரவ உறுப்பினர்ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பயிற்சி நெறிக்காக வருகின்றவர்களுக்கு கொடுப்பனவு வழங்க வேண்டும். இந்த சபையில் அதிகமாக வேலைகள் உள்ளதனால் உதாரணத்திற்கு LGA போன்ற உத்தியோகத்தர்களுக்கு வேலைப்ழு அதிகமாக உள்ளது. இவ் உத்தியோகத்தர்களுக்கு மேலதிக கொடுப்பனவை வழங்கி, மேலதிக வேலை நேரத்திற்கு வேலை செய்வதற்கு அனுமதி வழங்கினால் வேலைகளை இலகுவாக முடித்துக் கொள்ளலாம். அறவிடமுடியாதுள்ள வருமான வரிகளை அறவிடுவதற்கு புதியவர்களை உள்வாங்கி அறவீடு செய்யவும், அதிகாரிகளுக்கு சலுகைகளை வழங்கி, வேலையும் வாங்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்கள் கருத்தை உள்வாங்கியவனாக, நான் எவருக்கும் கொடுப்பனவு கொடுப்பதில் தடை செய்பவன் அல்ல. ஆனால் அதனை நியாயப்படுத்த வேண்டும். மேலதிக நேரம் கொடுப்பதென்றால் வழமையான நேரத்திற்கு மேல் வேலை செய்திருக்க வேண்டும். நான் சலுகைகளளை வழங்க தயாராக உள்ளேன். ஆனால் பெறுபேறு இருக்க வேண்டும். நான் உங்களிடம் நியாயப்படுதுவதென்றால் அதன் பெறுபோறு தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அந்த நிலமைக்கு நாம் இன்னும் வரவில்லை. திட்டமிடல் பிரிவில் Development வேலைகளின் அழுத்தத்தினால் அதிகமான வேலைகள் உள்ளது.அதற்கு நான் தடையில்லை.நான் கூறியிருக்கின்றேன் உதாரணமாக,Electricity,Water Bill வருவதென்றால் அந்தப் பகுதிக்குரியவர் அதனை நியாயப்படுத்தி அனுப்ப வேண்டும்.

அதாவது சென்ற மாதத்தைவிட இந்தமாதம் கட்டணம் கூடியிருந்தால் அது என்ன காரணத்திற்காக கூடியுள்ளது என்பதனை அவர்கள் நியயப்படுத்த வேண்டும். இன்று பிந்தி ஆரம்பித்த கூட்டத் தொடர் எனக்கு அவமானம். இது எனக்கு 54 வது கூட்டம் இதுவரை இவ்வாறு நடந்ததில்லை. வேலைகள் பூர்தியாகுமானால் எனது பையினாலும் கொடுப்பதற்கு நான் தயாராக உள்ளேன்.

**தீர்மானம் 11**

சபா மண்டபம், உறுப்பினர்களின் மண்டபம், பார்வையாளர் மண்டபம், ஊடகவியலாளர் மண்டபம், தொழுகை அறை, களஞ்சிய காப்பாளர் அறை, சப்பாட்டு அறையில் Pantry Cupboard, Sinkஎன்பவற்றை அமைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உப தவிசாளர் ஏ. யூசுப் லெப்பை
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சி. முஹம்மட் சஹீல்

**தீர்மானம் 12**

குறித்தொதுக்கப்பட்ட இடங்களில் குப்பைகளை இடாதிருக்க விளிப்புணர்வுப் பதாதை 05 இனை தயாரிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
காரைதீவிலுள்ள திண்மக்களிவு நிலையத்திற்கு எமது சபையினால் வழங்கப்படும் கழிவுகளுக்கான 01 தொண்னுக்குரிய கட்டணமாக ரூபா 950 செலுத்துவதற்கு உத்தேசமான 03 மாத காலத்திற்கு உங்களின் அனுமதியினைக் கேட்கின்றேன். உறுப்பினர்கள் எல்லோரும் கபினர் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள். இவ்வூரில் ஒரு திண்மக்கழிவு நிலையம் அமைக்க எல்லோரும் உதவி செய்ய வேண்டும்.

**தீர்மானம் 13**

காரைதீவிலுள்ள திண்மக்களிவு நிலையத்திற்கு எமது சபையினால் வழங்கப்படும் கழிவுகளுக்கான 01 தொண்னுக்குரிய கட்டணமாக ரூபா 950 செலுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ்

## கௌரவ உறுப்பினர்களின் மனுக்கள் / பிரேரணைகள்

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மாட்டிறைச்சியின் விலையினை மக்களுக்கு சாதாரண விலையில் வழங்குவதற்கான திட்டத்தினை கொண்டுவருமாறு கோரி இப் பிரேரணையை முன்வைக்கின்றேன்.

நிலப்பரப்பிலும், சனத்தொகையிலும் செறிவான எமது ஊரில் வசதி கூடிய, வசதி குறைந்த மக்கள் என பலரும் வாழ்கின்றனர். அதே நேரம் எமது பிரதேச சபைக்குட்பட்ட பெரும்பாலான பிரதேசங்களிளேதான் மாடு வளர்க்கும் பகுதிகளாகவும் காணப்படுகின்றன.

ஆனால், எமது ஊரை அண்மித்த ஏனைய ஊர்களை ஒப்பிடுகையில் எமது ஊரில் மாட்டிறைச்சியின் விலை அதிகமாகவே உள்ளது. அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை போன்ற பிரதேசங்களில் இறைச்சி 1kg 800 ரூபாவாக கட்டாய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் நிந்தவூர், அட்டாளைச்சேனை, காத்தான்குடி, சாய்ந்தமருது, கல்முனை போன்ற அனைத்து

ஊர்களிலும் 1kg 800 ரூபாவாக தனி இறைச்சி மற்றும் எலும்பு கலந்த இறைச்சி அதைவிட குறைந்த விலையிலும் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறு தங்களால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் கண்டிப்பாக விற்பனை செய்யவேண்டும் என அந்தந்த உள்ளூராட்சி சபைகளினால் கட்டாய அறிவித்தலும் விடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதே சூழலில் ஏனைய ஊர்களை ஒப்பிடுகையில் எமது ஊரில் அதிகமாக இறைச்சி விற்பனையாவதும் குறிப்பிடத்தக்க விடயம்.

எனவே எமது ஊரில் மாட்டிறைச்சி விலையினை குறைத்து அதனை கட்டாயம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து மக்களுக்கு நியாயமான விலையில் இறைச்சியை விற்பனை செய்ய சபையில் அங்கீகாரம் எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்வதோடு சபையில் அங்கீகாரம் எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்வேதோடு பிரேரணை அங்கீகரிப்பதற்காக சமர்பிக்கின்றேன்.

**தீர்மானம் 14**

எமது ஊரில் மாட்டிறைச்சியின் விலையினை குறைத்து, அதனை கட்டாய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து மக்களுக்கு நியாயமான விலையில் இறைச்சியை விற்பனை செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபாஅவர்கள்:**
இப்பிரேரனை பற்றிய விடயம் எமக்கு கிடைக்க வில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். அனுப்பப்படவில்லை. உங்களுக்கு இப்பிரேரனை விழங்கிவிட்டதுதானே. நான் சென்ற கிழமை இறைச்சிக் கடை உரிமையர்கள், கோழிக் கடை உரிமையாளர்கள் எல்லோரையும் ஒரு கூட்டத்திற்கு அழைத்திருந்தேன். இந்த விடயம் தொடர்பாக பேசுவதற்கும் அவர்களின் திண்மக்கழிவு அகற்றுவது தொடர்பாகவும். இதில் நடைமுறை பிரச்சினைகள் இருந்தாலும் சட்டம் என்ன சொல்லுகின்றது என்றால், சந்தையில் நாங்கள் ஏலம் இட்டு கொடுக்கவும், சந்தையில் விலை நிர்னயிக்கலாம் என்று சொன்னாலும். தீர்மானத்தை கட்டாயம் செய்ய வேண்டும். இதில் இருக்கின்ற நடைமுறைப் பிரச்சினை என்னவென்றால், நான் படித்ததினால் கூறுகின்றேன். அட்டாளைச்சேனைக்கு 3.00 மணிக்கு சென்றாலும் இறைச்சிக் கடையில் இறைச்சி இருக்கும். அக்கரைப்பற்றிலும், இறைச்சி இருக்கும், நிந்தவூரிலும் ஓர் அளவு இருக்கும், நிந்தவூரில் ஒன்று இரண்டு இறைச்சிக் கடைகள் இருப்பதனால் இறைச்சி கிடைப்பது அரிது. கரையோரத்தில் பிரதான கறி மீன்.இரண்டாவது கறி இறைச்சியாக இருக்கின்றது.

சம்மாந்துறையில் அதற்கு மாற்றமாக, பிரதான கறியாக இறைச்சியும், இரண்டாவது கறியாக மீனும் காணப்படுகின்றன. நோன்பு காலத்தில் இறைச்சி எடுப்பதற்கு கஸ்டம் 12.00 மணிக்கு இறைச்சிக் கடைக்கு சென்று இறைச்சி வாங்கலாம். ஆனால் இங்கு 10.30 - 11.00 மணியகும் போது இறைச்சி முடிந்துவிடும். இங்கு இறைச்சிற்கான கேள்வியும் விற்பனையும் அதிகமாக காணப்படுகின்றது. மூதூரில் இறைச்சியின் விலை 600.00 ரூபாவாகும். சம்மாந்துறையில் உள்ள பிரச்சினை என்னவென்றால் நம்மைச் சுற்றி மாடுகள் குறைவாக உள்ளது. பன்டாரகம போன்ற பிரதேசங்களில் கஷ்டப்பட்டு கொண்டு வருவதனால் கிம்பளத்துடன் அதன் விலை கூடுகின்றது. நீங்கள் கூறலாம் சபையினால் இறைச்சிக்கடையை ஏலத்தில் விலையை கூட்டுகின்றார்கள் என்று. அதனை நம் கூட்டவில்லை. உண்மையாக சட்டப்படி நாம் அந்த முயற்சியினை செய்வோம். வெள்ளிக்கிழமைகளில் இறைச்சிக் கடைகளில் மக்கள் முண்டியடித்துக் கொண்டு இறைச்சினை

வாங்குகின்றார்கள். என்ன இறைச்சி என்றாலும் வாங்குகின்றார்கள். மடுவத்தையினை நவீனமயப்படுத்த ஒரு Proposal தயாரித்திருக்கின்றேன்.

கௌரவ உறுப்பினர்கள் சபைக்குக் கொண்டு வரும் பிரேரனைகளைதனித்தனியான பிரேனையாக தாருங்கள். அப்போது அதனை முழுமையாக ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு இலகுவாக இருக்கும். இதற்கு கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் முன்னுதாரனம்.

**கௌரவ உறுப்பினர் ஆர்.வளர்மதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே,சம்மாந்துறை பிரதேச சபையின் கீழுள்ள மல்வத்தை மற்றும் வளத்தாப்பிட்டி பகுதிகளில் நுண்கடன் வழங்கும் நிறுவனங்களினால் யாரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு மக்களுக்கு கடன் வழங்குகின்றார்கள் என்று தெரிய வில்லை, இதனால் ஒவ்வெறு கிராமத்திலும் வசிக்கின்ற மக்கள் பாரிய கடன் சுமையுடன் வாழ்ந்துவருகின்றனர். பொதுவாக எமது சபைகுட்பட்ட தமிழ் கிராமங்களில் நுன்கடன் வழங்கும் திட்டம் மிகவும் வேகமாக பரவிவருகின்றது.

குறிப்பாக மல்வத்தை, வளத்தாப்பிட்டி, வீரமுனை பிரதேசங்களில் 15 இற்கு மேற்பட்ட நிறுவனங்களினால் கடன் வழங்கப்படுகின்றது. இதற்காக அறவிடப்படும் வட்டி வீதமோ, கடனின் தன்மையோ மக்களுக்கு தெரியாது. பொதுவாக அரச வங்கிகள், அரச அமைப்புகள் கடன் வழங்கும் போது ஏதாவது ஒரு திட்டத்தினை செயற்படவைத்து, அதன் மூலம் வருமானாத்தினை அதிகரித்து கொள்ளும் வண்ணம் கண்கானித்து செய்து கட்டம் கட்டமாக செயற்திட்டத்தினை உயர்த்தும் நோக்குடன் செயற்படுகின்றனர். ஆனால் இலாப நோக்கம் கொண்ட நிறுவனங்கள் இன்று வீட்டுக்கு வந்து விண்னப்ப படிவங்களை நிரப்பினால் நாளை அல்லது நாளை மறு தினம் கடன் வழங்கிவிடுவார்கள். இதற்கு காரணம் சாதாரண மக்களிடமிருந்து அதிமான வட்டியை அறவிடக் கூடியதாக இருப்பதனால்தான். எனவே கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த நிறுவனங்கள் அதி கூடிய வட்டியை அறவிடுவதை தடுத்து நிறுத்தி அரச வங்கிகள், அமைப்புகள் நிறைந்து இருக்கின்றன மிக குறைந்த வட்டி வீதத்தில் மாத்திரம் மக்களிடம் இருந்து மாதாந்த அடிப்படையில் அறவிடுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதாவது அதிக வட்டி அறவிட்டு இலாபம் தேடும் நிறுவனங்களை தடுத்து நிறுத்தி மக்களின் எதிர்காலத்தின் நலனுக்காக இந்த நிறுவனங்களை திசை திருப்ப வேண்டும் என கெரவ தவிசாளரை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மல்வத்தை நகர பகுதியில் வீடு, மற்றும் காணி உரிமையாளர்களின் நிலங்கள் பாதுகாப்பு அமைச்சினால் விடுவிக்கப்பட்டும், இதுவரைக்கும் உரிமையாளர்களினால் துப்புரவு செய்யப்படாது பற்றைக் காடாகவும், நீர் தேங்கி கிடக்கும் குழிகளை கொண்டதாக காணப்படுகின்றமையால், நுளம்புகள் பரவும் அபாயம் அதிகரிப்பதோடு, சூழல் பாதுகாப்பிற்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. அத்துடன் மல்வத்தை வட்டாரத்தில் வீடுகள் அமைக்கப்படாத பல காணிகள் இதே போன்று சூழல் பாதிப்பினை மக்கள் ஏற்படுத்துகின்றமையால், இந்த காணிகளின் உரிமையர்களுக்கு உரிய அதிகாரிகளின் ஊடாக விளிப்புனர்வுகளை ஏற்படுத்தி, மக்களுக்கான சுகாதார நலனை மேம்படுத்த உதவவேண்டும் என கௌரவ தவிசாளரை கேட்டுக்கொள்கின்றேன்.

மல்வத்தை பொது நூலகத்திற்கான சுற்றுமதில் அமைத்தல். பொது நூலக வளாகத்தில் சுற்றுமதில் அமைக்கப்படாத காரணத்தினால் கால்நடைகள் உட்புகுந்து மரங்கள், பயிர்களை அழிப்பதுடன் உடமைகளையும் சேதப்படுத்தி வருக்கின்றன. இதனால் சுற்றுமதில் கட்டயமாக அமைக்கப்பட வேண்டியுள்ளது.

மேலும் மல்வத்தை பொது நூலகத்திற்கு 1990ம் ஆண்டின் பின் இன்று வரை எந்த விதமான புதிய புத்தங்களும் பெற்றுக்கொடுக்கப்படாத காரணத்தினால், மாணவர்கள் இந்த நூலகத்தில் பயன்படுத்துவதிலிருந்து விலகிவருகின்றனர்.

எனவே, மாணவர்களின் தற்கால கல்வி நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் சகல வகுப்பு மாணவர்களுக்கும் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு புதிய புத்தங்களை எமது பொது நூலகத்திற்கு

பெற்றுதந்துதவுமாறு கௌரவ தவிசாளரை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.அனைவருக்கும் நன்றிகூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நுண்கடன் என்பது ஒரு சமூக பிரச்சினை. இதில் ஆபத்து இருக்கும் என்று மக்களுக்கு தெரியும். ஆனால் மக்களின் தேவை அதற்கு மேலே வருவதினால், பலர் வங்கிக்கு போனால் அந்த கரண்டிஸ் இல்லை என்றுபோவதினாலும் யாழ்பானத்தில் இது இன்னும் மேசமான நிலையில் உள்ளது. இதற்கு அரசாங்கம் தலையிட்டுள்ளது. தற்போது அந்த நிறுவனங்கள் மக்கள் மத்தியில் செல்வதென்றால் பிரதேச சபையில் அனுமதி பெறப்பட வேண்டும். அந்த நிறுவனங்களும் உத்தியோக பூர்வமாக எழுதி மத்திய வங்கிக்கும் அதனை அறிவித்து உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இருந்தும் மக்கள் விளிப்புனர்வாக இருக்க வேண்டும். இது ஒரு பாரிய சமூக பிரச்சினை. யாழ்பானத்தில் தான் அதிகமான படித்தவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் மிகவு மோசமான நிலையில் இருக்கின்றார்கள். இது தொடர்பாக கருத்துக்கள் தெரிவிப்பதென்றால் தெரிவிக்கலாம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
நுண்கடன் திட்டமானது மல்வத்தை, வளத்தாப்பிட்டி பிரதேசத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தி இருக்கின்றது. இன்று அதிகமான மக்கள் கடனை பெற்று செலுத்த முடியாததினால் கடன் அறிவிட வரும் போது, வீட்டை விட்டு ஒழிந்து விடுகின்றனர். கடனை செலுத்துவதற்காக ஒரு வேளை சப்பாட்டிக்கு பழக்கமாகி கொண்டு, பகலில் சமைக்காமல் இருக்கிறனர். அதற்கு மேலதிகமாக கடன் கொடுத்த பெரிய பெரிய நிறுவனங்கள் சம்பத் லீசீங், People லீசீங், கொமர்ஷியல் கிறடிட் போன்ற பெரிய நிறுவனங்கள் கூட இந்த நுன்கடனை வழங்கி விட்டு, அதனை அறிவீடும் உத்தியோகத்தர்கள் மாலை 7.00 மணி 8.00 மணி வரை வீடுகளில் தங்கி இருக்கின்றார்கள். அந்த வீட்டில் அவர்கள் ஒழிந்து இருப்பதினால் பாரிய சமூக பிரச்சினைகள் ஏற்படுகின்றது. இது நிச்சயமாக தடுக்கப்பட்ட வேண்டும். பிரதேச சபையினால் நாம் அறிக்கை ஒன்றினை அனுப்புவது சிறந்தது என நான் கருதுகின்றேன்.

இரண்டாவது எங்களுடைய உறுப்பினர் கூறியது,மல்வத்தை நூலகத்திற்கு சுற்றுமதில் அமைக்க வேண்டும் எனவும். மல்வத்தை உப அலுவலக கட்டிடத்திலே மூன்று அலுவலகத்திற்குரிய கட்டடங்கள் இருக்கின்றன. அதன் கூரைகள் உடைந்து தன்னீர் உள்ளே போகின்றது. உடனடியாக கூரைகள் திருத்தப்பட வேண்டும். ஏனெனில் அது எமது சபைக்குரிய கட்டிடங்கள். அதனை திருத்தி பொது அமைப்பு அல்லது பொது தேவைகளுக்கு வழங்குவது சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம். சித்தி நிலுவ்பாஅவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நுண்கடன் பிரச்சினையில் தமிழ் மக்கள் மற்றும் பாதிக்கப்படவில்லை. எங்களுடைய பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மக்களும் இந்த நுண்கடனை பெற்றுக் கொண்டு மிகவும் கஸ்டப்பட்டு, கணவன் மனைவிக்கு இடையில் பிரச்சினைகள் அதாவது உரிய நேரத்திற்கு சமைப்பதில்லை. சாப்பாட்டு நேரத்தில் கடன் அறவிட வருவது போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றது. இப்படியான வியாபாரிகள் எங்களுடைய பிரதேசத்திற்கு வந்து, எங்களுடைய சமூகத்தினையும் சீரழிக்காமல். ஏதோ ஒரு தீர்மானத்தினை இந்த சபையினால் எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் நிலுவ்பா கூறியதற்கு இனங்க அதனை ஏற்றுக்கொள்கின்றேன். நடைமுறையில் கான்கின்ற விடயம் என்னவென்றால், ஆண்கள் வீட்டில் இல்லாத நேரத்தில் கடன் அறவிடுபவர்கள் வருகின்றனர். அவர்கள் பெண்களுடன் மிகவும் அன்னியொன்னியமாக நடந்து கொள்கின்றார்கள். இது சமூகத்தில் வேறு பிரச்சினைகளுக்கும் வழிகோருகின்றது. கனவன் மனைவிக்கு இடையில் ஏற்படுகின்ற பிரச்சினைக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்த கடனை அறிவிடுகின்றவர்கள் குறிப்பிட்ட நேரம் கௌரவ உப தவிசாளர் ஜெயசந்திரன் கூறியதை

போல் அலுவலக நேரம் மத்திரம்தான் கடன் அறிவிட முயறச்சிக்கவேண்டும். அலுவலக நேரம் தவிர்ந்த நேரங்களில் அதுவும் பெண்கள் தனிமையில் இருக்கின்ற போது அந்த வீடுகளுக்கு நுழைவதை கட்டுப்பாட்டிக்குள் கொண்டுவந்தால் நலவாக இருக்கும் என்று கூறுக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது ஒரு சமூகப் பிரச்சினை என்று கூறியதற்கு பல காரணங்கள் இருக்கின்றது. கடன் எதற்காக பெறப்பட்டது என்பதுதான் இந்தப்பிரச்சினைக்கு காரணம். அதிகமான கடன்கள் ஆடம்பரமான பொருட்களை வாங்குவதற்கு பெற்றுக் கொள்கின்றனர்.வருமானத்திற்குரிய கடனாக இல்லாமல் செலவைக் கூட்டுகின்ற கடனாகவே அமைகின்றது.அதற்கு சம்மாந்துறை பொலீஸ் நிலைய அதிகாரியையும் கூப்பிட்டு உடனடியாக இந்த நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் கலந்துரையாடலுக்கு அழைத்து பிரச்சினையைப் பேசி கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.சில இடங்களில் இந்த நேரத்திற்கு கடன் அறவிட வரலாமா?என்று SMS மூலம் போகும்.பெண் உறுப்பினர்களுக்கு இவ்விடயத்தில் பாரிய பங்களிப்பு உள்ளது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம். சித்தி நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நுண்கடனை பெற்றுக்கொண்டு அவர்களின் தொழிலை மேம்படுத்த வில்லை. செலவீனங்களை அதிகரிக்கிறதே தவிர அவர்களுடைய வருமானத்தினை உயர்த்தக்கூடிய எந்த நடவடிக்கையும் செய்யவில்லை. வயதுக்கு வந்த பிள்ளைகள் இருக்கின்ற வீடுகளில் அதிகமான தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறிய வியடங்களை தான்டி எங்களுடைய பிரதேசத்தில் இருப்பது வித்தியாசமான பிரச்சினை. எங்களுடைய பகுதியில் 100 க்கு 75-80 வீதமானவர்கள் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்காக ஆண்கள் அல்லது பெண்கள் சென்றுள்ளனர். அவர்கள் நுண்கடன் கடன், வட்டிக்கு கடன் வாங்கிதான் வெளிநாட்டுக்கு சென்றுள்ளனர். உரிய காலப் பகுதியில் கடனை செலுத்த முடியாமல், வட்டி கட்ட கடன் வாங்கி அந்த கடனை அடைப்பதற்காக இன்னோரு இடத்தில் கடன் வாங்குகின்றனர். எங்களுடைய பிரதேசத்தில் இரண்டாது பிரச்சினை சமூக கட்டமைப்பில் இருக்கும் சீதனம் வீடு கட்டி கொடுக்கவேண்டும்.வீடு கட்டுவதற்கு கடன் பெறுவது. இதனால் தான் இங்கு இருக்கின்ற பிரச்சினை எங்களுடைய பிரதேசத்தில் வித்தியசமான தன்மை உள்ளது. மிகவும் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நிதி நிறுவனங்கள் ஏதோ ஒப்பந்த அடிப்படையிலும், நிபந்தனை அடிப்படையில் மக்களுக்கு கடனை வழங்கியிருக்கின்றது. மக்கள் யோசிக்க வேண்டும். கடன் பெறுவதற்கு முன் இந்தக் கடனை எப்படி தீர்க்க வேண்டும் என்றும், அதற்குரிய முதலாவது பெறுப்பு கடன் பெற்றவருக்குத்தான் இருக்கின்றது. கொடுத்தவர்களுக்கு இல்லை. அதற்காக நான் கொடுத்தவர்களை நியப்படுத்த வரவில்லை. இதற்கு இந்தப் பிரச்சினைக்கு நான் அறிந்தமட்டில் நிந்தவூர் பிரதேசத்தில் அதிகமான மக்கள். கடனை பெற்றதினால் கடன் அறவிடுகள் முறையற்ற விதத்தில் நடந்ததினால் அதனை பள்ளிசல்களின் ஊடாக ஜும்மாக்களில் அறிவித்து அவர்களை இந்த ஊருக்குள் வராமல் முதல் கட்டமாக தடுத்திருக்கிறார்கள்.

அதற்கு பிறகு 2ம் கட்டமாக, கடன் கொடுத்தவர்கள் கடன் எடுத்த விலாசங்களின் அடிப்படையில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை தபால் மூலம் அனுப்பி வைத்திருக்கின்றார்கள். எனவே நாங்கள் முதல் கட்டமாக தபால் மூலமான நடவடிக்கை கடன் பெற்றவர்களுக்கு அனுப்பி நடவடிக்கைகளை வைப்பது சரியாகும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர்ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடன் திட்டத்திற்கு இவர்களிடம் போவதற்கு மிக முக்கியமான காரணம் என்னவென்றால் அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு இந்திரசித் குமாரசாமி கடன்

வட்டி வீதத்திற்கு இவர்களை தடைசெய்து, கடன் வழங்குவதற்கு மிகக் குறைவான வட்டி வீததிற்கான கடன்களை அதிகரிக்க வேண்டும். ஆனால் நாம் அவர்களுக்கு முதல் அறிவுரை வழங்கப்பட வேண்டும். அரசாங்களில் நிலையான வங்கிகள் இருக்கின்றது. அவர்கள் கடனை வலியுறுத்தினாலும் கடன் வழங்குவதில்லை. காரணம் இவர்கள் கேட்கும் தரவுகள், காலதாமதம் காரணமாக அவசரமாக கடனைப் பெற்றுக்கொள்ள முடியாமையாமல் கடன் கேட்பவன் அவனது பிரச்சினை தீராமல் செத்தே போய்விடுவான். அதிகமான திட்டங்கள் இருக்கின்து. அவைகளை முன் மொழிந்திருக்கின்றார்கள் ஆனால் வங்கிகளில் நடைமுறையில் இல்லை,

இதனை நாம் உள்வாங்க வேண்டும். ஏனெனில் ஒரு நிலையான வங்களில் கடன் பெறுவது அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும். நாம் இங்குள்ள அரச வங்கிகளுக்கு தெளிவாக இதற்கான விடயத்தை விளங்கப்படுத்தி பொதுவாகவும், தரகர் மூலம் சம்பந்தமில்லாத நிதி நிறுவனங்கள் மூலம் கடன் பெற வேண்டாம் எனவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர்யூ.எல். அஸ்வர்அவர்கள்:**
இந்தக் கடனை மக்கள் பல தேவைகளுக்காக பெற்றுக்கொள்கின்றார்கள். உதாரணமாக ஆடம்பர பொருட்களை வங்குவதற்காகவும், நான் சென்ற மாத சபை கூட்டத்தில் என்னுடைய பேச்சில் மலசல கூடம் சம்மந்தமான நான் பேசும் போது 54000 ரூபாய் பெறுதியான ஒரு மலசலகூடம் கட்டுவதற்கு மாணிய அடிப்படையில் 30000ரூபாவும் 24000 ரூபாவை உரிய நபர் பங்களிப்பு செய்யவேண்டும் என்ற ஒரு தினிப்பு வந்தது.

இதுவும் இந்தக் கடனுக்குரிய வழிப்பாடாகத்தான் அமைகின்றது. ஒன்றும் இல்லாதவர்கள் வீட்டுக்கு 24000ரூபாவை கடன் படுகின்றனர்.அதாவதுவருகின்ற 30000ரூபாவை எப்டியாவது. பெற்றுக் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் மக்கள் வட்டிக்கு கடனுக்குள் போவதற்கு வழிவகுக்கபடுகின்றது.

எனவே எம்முடைய சேவைகளிலும், மாணிய அடிப்படையிலான சேவைகளையும் முயற்சிகளையும் செய்யவேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மானிய அடிப்படையில் என்பது நமது மக்களுக்கு இலவசமாக கொடுத்தால் சந்தோசமாக எடுத்துக் கொள்வார்கள். அதன் அடிப்படையில் தான். இது ஒரு தினிப்பில்லை. இது ஒரு கருத்து. நாம் அப்டியான பணங்களை நேரடியாக நன்கொடையாக எடுக்க முடியுமானால் 60000ரூபாவை கொடுக்கலாம்.அதில் பிரச்சினை இல்லை. சபை என்று வரும் போது அதில் ஒரு பாரம் இருக்கவேண்டும்.

இந்த முன்மொழிவுகளில் முதலாவதற்கு நாம் எழுதி பள்ளிவாசல், நம்பிக்யைாளா் சபை, பொலிஸ் நிலையம், பிரதேச சபை, ஆலயங்கள், இவைகள் அனைத்தும் சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

மல்வத்தை நகரத்தில்பராமரிக்கப்படாமல் உள்ள காணி உரிமையாளர்களுக்கு பிரதேச சபை இன் சட்டத்தின் கீழ் அதனைப் பராமரிக்குமாறு அறிவித்தல் வழங்குமாறு பிரதேச சபை செயலாளருக்கு கட்டளை இடுகின்றேன்.

**தீர்மானம் 15**

மல்வத்தை பொது நூலகத்திற்கு சுற்றுமதில் அமைப்பதற்கும், புதிய புத்தகங்களை வழங்குவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஆர்.வளர்மதி

ஆமோதித்தவர் : கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன்

**கௌரவ உறுப்பினர்எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே,செந்நெல் கிராமம் 2ம் பிரிவில் உள்ள சந்தை வளாகத்தை துப்புரவு செய்தல்,மற்றும் அதற்கான சுற்றுப்புற வேலியினை அமைத்தல், வர்த்தக சந்தையையும் ஆரம்பித்தல்.

மல்கம்பிட்டி பிரதான வீதியில் உள்ள கைகாட்டி சந்தியினை முதற்கட்டமாக நான்கு பக்கம் பாதைகளையும் குறிப்பிட்ட தூரத்திற்கு விஸ்தரித்தல், அவ் விடயத்தில் கட்டாயம் சுற்று வட்டமொன்றை அமைக்க அத்தோடு அதற்கு அருகில் பாடசாலை இருப்பதினால் ஆரம்ப கட்டமாக பாதையினூடக செல்கின்ற வாகனங்களின் அதி வேகத்தைத் தடுப்பதற்கான வீதி தடுப்புக்களை அமைத்தல்., சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வீதிச் சமிக்கைப் பாதைகளை நிறுத்துதல்.

சம்மாந்துறை புள்க் ஜே மேற்கு 1ம் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள சம்மாந்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான எஸ்.பீ - 19 கிளை அமைந்துள்ள இடம் பாழடைந்த நிலையில் உள்ளதால், அவ்விடத்தில் திண்மக்கழிவுகளை, மாமிசங்களையும் போடுவதால் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள்பல ஏற்படுகின்றன. இது தொடர்பான அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு இப்பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுத் தருமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, நுண்கடன் வழங்குவதற்காக நான் அறிந்த வகையில் எமது ஊரிற்குள் காரைதீவில் இருக்கின்ற ''பறாக்'' என்கின்ற தனியார் நிறுவனம் ஒன்றும், அக்கரைப்பற்றில் இருக்கின்ற ''பெண்கள் அபிவிருத்தி'' தனியார் நிறுவனம் ஒன்றும் நுண்கடனை வழங்கி கொண்டு இருக்கின்றார்கள்.

இவ்வாறு வெளியூரிலே, அதாவது எங்களுடைய பிரதேசத்தை அன்மித்த ஒரு பிர தேசத்தில் இருக்கின்ற சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் இன்னொரு இடத்திற்குச் சென்று கடன் வழங்குவதற்கு இந்த ஊரில் இருக்கின்ற ஏதாவது நிறுவனங்கள் அல்லது சபையின் அனுமதி வழங்க வேண்டுமா? அவர்கள் அனுமதி பெறவேண்டுமா? இல்லாவிடின் விரும்பியவாறு அவர்கள் இங்கே வந்து அந்தக் கடடனை வழங்க முடியுமா? இது சம்மாந்தமான தெளிவிளை இந்த சபையில் வழங்கிளால் நன்றாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நமது எல்லைக்குள் நிரந்தரமான வியாபாரம் செய்பவர்கள் நமது சபையில் வர்த்தக License எடுக்க வேண்டும். ஆனால் வெளியிலிருந்து வந்து, என்று கூறுவதைவிட அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் இருப்பதனால் தான் வருகின்றார்கள்.இந்தக் கொடுக்கல் வாங்கல் ஒரு தனிப்பட்ட ரீதியில் சம்மாந்துறையில் பதியப்படாது. இவை பிரச்சினை என்று வரும் போதுதான் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. இல்லாவிடில் நமக்குத் தெரியாது.சம்மாந்துறையில் இருக்கும் வங்கிகள் எல்லாம் சம்மாந்துறை பிரதேச சபை இல் பதியப்பட்டவைகள் Trede License எடுத்தவைகள் இல்லாவிட்டால் அவர்களுக்கு வியாபராம் செய்ய முடியாது.பிரச்சினைகள் வரும் போது நாம் அவர்களைக் கூப்பிட்டு இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியவர்களாகத்தான் இருக்கிகின்றோம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இது அரசார்பற்ற ஒரு நிறுவனமாகத்தான் இருக்கின்றது. இவ்வாறான ஒரு அமைப்புக்கள் ஒரு பிரதேசத்தைவிட்டு இன்னொரு பிரதேசத்திற்கு தங்களது வேலைகளை விஸ்தரிக்கச் செய்யும் போது அவர்கள் பிரதேச சபையின் முன்அனுமதி பெற வேண்டும். இதற்கு பிரதேச சபை அனுமதி வழங்க வேண்டும். இதனை கட்டுப்பட்டிற்குள் கொண்டு வரவேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் செந்நெல் கிராமம், சந்தை பற்றி என்னிடம் கூறியிருந்தீர்கள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 2017 ஆம் ஆண்டு செந்நெல் கிராமத்திலே ஒரு சந்தை அமைப்பதற்காக 25 மில்லியன் ரூபாய் நகர திட்டமிடல் அபிவிருத்தி அமைச்சின் மூலம் கௌரவ அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்கள் ஒதுக்கியிருந்தார்கள்.

கால அவகாசம் இல்லாத காரணத்தினால், அக் கட்டத்தை பூர்த்தி செய்ய முடியாத ஒரு சுழ்நிலை எழுந்தததனால் அந்தப் பணத்தை நாங்கள் வீதி அபிவிருத்திக்கு செலவிட்டோம். மீண்டும் 2018ம் ஆண்டு அங்கே சந்தை அமைப்பற்கான முன்மொழிவுகள் அமைச்சரிடத்தில் வாய்மூலம் பேசி இருக்கின்றேன். இன்ஷா அல்லாஹ் இந்த வருடத்திற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதும் அடுத்த கிழமை அமைச்சரை சந்தித்து அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்கின்றேன்.

**தீர்மானம் 16**

செந்நெல் கிராமம் 02 பிரிவில் உள்ள சந்தை வளாகத்தை துப்பரவு செய்தல், மற்றும் அதற்கான சுற்றுப்புற வேலியினை அமைத்தல், வர்தக சந்தையையும் ஆரம்பிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மல்காம்பிட்டி பிரதான வீதி உண்மையாக அபிவிருத்தி செய்ய வேண்டிய இடம். அதுவும் City Planning கீழ் தான் செய்ய வேண்டி வரும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வலது பக்கமாக செல்லுகின்ற பாதை 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தற்போது அபிவிருத்தி செய்யபட்டுக் கொண்டு வருகின்றது. இடது பக்கமாக செல்லுகின்ற மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் மாவத்தை என்கின்ற பாதைக்காக 2 கோடி 11 இலட்சம் ஒதுக்கப்பட்டு தற்போது வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த இடத்தில் மிக மனவருத்தத்துடன் ஒரு விடயத்தைக் கூற வேண்டும். பாதை வேலைகளை பெற்றுக்கொண்ட ஒப்பந்தக் கார்கள்களின் அசமந்தப் போக்கு காரணமாக, குறிப்பாக வண்டு வாய்க்கால் வீதிற்கும் 30 மில்லியன், மல் - 2ம் வீதிற்கும் 15 மில்லியனும் 2017ம் ஆண்டு 03 மாதம் அதற்குரிய பணம் மாகாண சபை பிரதம செயலாளருடாக உள்ளுராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு, ஒரு வருடகாலத்திற்கு மேற்பட்டும், இன்னும் ஒப்பந்தக் காரர்களினால் அதற்குரிய வேலைகள் முடிக்கப்படாமல் இருப்பதனால்.

நான் கடந்த கிழமை கிழக்கு மாகாணத்திற்கு பெறுப்பான பொறியியளாரிடம் பேசிய போது, அவா் கூறினார். நான் கௌரவ தவிசாளர் அவர்களிடத்திலும் இதைப்பற்றி பேசியிருக்கின்றேன். என்று மிகவும் கடுமையான நடவடிக்கை எடுத்து இவர்களுக்கு குறிப்பிட்ட கால எல்லைக்குள் தாங்கள் அபிவிருத்தி வேலைகளை பூர்த்தி செய்ய முடியாத ஒப்பந்தக் காரர்கள், சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் இனிவரும் காலங்களில் எந்த ஒரு வேலைத்திட்டத்தினையும் செய்வதற்கு தகுதியற்றவர்கள் என்ற ஒரு தீர்மானத்தை இந்த சபை எடுத்து கிழக்கு மாகாண உள்ளுராட்சி அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விருப்புகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயத்தில் உண்மையாக மாகாண சபை நடைமுறைப் பிழைகளை விட்டது. அவர்கள் கொந்தறாத்துக்களை வழங்கியிருந்தாலும், சகல எழுத்து மூல நடவடிக்கைகளும் பிரதேச சபை மூலம் செய்திருக்க வேண்டும். அப்படியானால் பிரதேச சபை அதனை தொடர்ந்து கண்கானிக்கலாம். இது மாகாண சபையினால் வழங்கப்பட்டு விட்டு, அதன் கோவைகள்கூட சம்மாந்துறை பிரதேச சபைக்கு வராத வகையில், சம்மாந்துறை பிரதேச சபை எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

பொறியிலாளா் என்னுடன் இதைப்பற்றி பேசினார்.நான் உடனடியாக BOQ,Contract Copy அனுப்புங்கள்.என்று கூறினேன் நாங்கள் அது கிடைத்தவுடன் எழுத்து மூலம் அவர்களுக்கு அறிவிப்போம். நான் அதில் உடன்பாடு. பொது வேலைகளை எடுத்து அந்தக் காலத்திற்குள் நிறைவேற்ற முடியாத ஒப்பந்த கார்களை சம்மாந்துறை பிரதேச சபை வேலைகளில் ஈடுபடக் கூடாது என்று நாம் பொதுவாக என்னுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் சென்ற மாதம் கூட அதற்கு ஒரு கூட்டத்தைக் கூட்டி அவர்கள்தான் 45 நாட்கள் கால அவகாசம் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் எங்களுக்கு எழுத்துமூலம் எந்த அறிவித்தலும் இல்லை. எமுத்துமூலம் எமக்கு அறிவித்தவுடன் நாம் நடவடிக்கை எடுக்கலாம். நாம் கைகாட்டி சந்தி பற்றி ஒரு Planஐ உருவாக்கும்படி City Planning அமைச்சுக்கு உத்தியோக பூர்வமாக எழுதி வேண்டுகோள் விடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம் றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்காலிக அடிப்படையில் கடமையாற்றும் உழியர்களை நிரந்தரமாக்குவதற்கு ஆவண செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கிட்டத்தட்ட 07 கோடி ரூபாய் பணம் 03 வீதிகளுக்கும் ஒதுக்கப்பட்டு இன்னும் வேலைகள் முடிவுறாத நிலையில், மீண்டும் அந்தப் பிரதேசத்திற்குபணம் தாருங்கள் என்று கேட்பதற்கு எனக்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் இல்லை என்பதை இந்த சபையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்காகத்தான் நான் அனுப்பிவைக்கின்றேன் என்று கூறினேன்.

**கௌரவ உறுப்பினர்எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே,நான் கேட்டுக் கொண்டவிடயம், ஆரம்ப கட்டமாக எங்களுடைய சபையினால் எடுக்கக்கூடிய முடிவு அதாவது அந்தப் பாதையில் கனரக வாகனங்கள் மிகக் கூடுதலாக செல்வதனாலும், பாடசாலை இருப்பதனாலும் அதிவேகத்தைக் கட்டுப்படுத்தகூடிய முயற்சியை தாங்கள் சபையின் மூலம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை RDA வுக்கு எழுத்து மூலம் அறிவித்து உத்தியோக பூர்வமாக அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேம். City Panning க்குக்குரிய வைகளையும் அனுப்பிவைப்போம்.

SP - 19 அதனை பிரதேச சபை மூலமாக உத்தியோக பூர்வமாக பாரமெடுத்து, அதில் ஒரு நெசவு ஆலையம் அமைப்பதற்கான முயற்சி ஒன்று எடுக்கின்றோம். அதனைப் போன்று இன்னும் சில கிளைகள் இருக்கின்றது. அவைகளுக்கும் நம்மிடம் உள்ள வளங்களைக் கொண்டுவந்து செய்யலாம் உத்தியோக பூர்வமாக எழுதி அதனை நடைமுறைப்படுத்தலாம்.தனிப்பட்ட முறையில் தறிகள் போட முடியாது. ஏனென்றால் அவைகள் துஸ்பிரயோகமாக்கப்படும்.

**கௌரவ உறுப்பினர்கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற அமர்வின் போது பாடசாலை முடித்துவிட்டு வீட்டில் இருக்கும் பெண் பிள்ளைகளுக்கு பயிற்சிப்பட்டறை ஒன்று செய்ய வேண்டும் என்று நான் இவ்விடத்தில் கூறினேன். ஆனால் பயிற்சிப் பட்டறைக்குரிய Proposalஅனுப்பினேன். ஆனால் அவர்கள் கூறியது Proposalஇல் கேட்டார்கள், உங்களுக்குப் பொருத்தமான இடங்களையும் எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று. ஆனால் நான் சம்மாந்துறை பிரதேச சபை கட்டடத்திற்குரிய Community Center களை மக்களின் நன்நோக்கத்திற்காக திருத்தித் தருமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

நீங்கள் கூறியது போல் SP 19, சம்புமடுவில் இருக்கும் Community Center ஐயும், மஜீட்புறத்தில் உள்ள Community Centerஐயும் திருத்தித் தருமாறு வேண்டிக் கொள்வதோடு, எங்களிடம் இருக்கின்ற 2018 பஜட்டில் 27 ஆம் பக்கத்தில் உள்ள சனசமூக நிலையத்திருத்தத்திற்கான ஒரு இலட்சம் ரூபாவையும், 22 ஆம் பக்கத்தில் மூலதனத்தில் உள்ள இரண்டு இலட்சத்தையும் இதற்கு பாவித்து Community Center களை திருத்தலாம் என நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
SP - 19, செந்நெல் கிராமம் கிளைகளை MPCS க்கு எழுத்துமூலம் கேட்கலாம். மஜீட்புர Community Centerஇல் திருத்துவதற்கு ஒன்றும் இல்லை. அதற்குள் அனைத்தும் உள்ளது.அதாவது தையல் மிசின் தறி போன்றவைகள் உள்ளது. நூலகம் உள்ளது.அதுவும் இயங்குவதில்லை. ஊரின் இழுபறியினால் அவை மூடிக்கிடக்கின்றது. அதனைCDO விடம் அறிவித்தல் கொடுத்திருக்கின்றேன். அதனைப் பாரமெடுத்து அங்குள்ள மக்களைக் கூட்டி பள்ளிவாசல் தலைமையில் கூட்டி அதனை இயக்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நூலகத்தினைத் திறந்து மீண்டும் இயங்க வைக்க வேண்டும்.குறிப்பிட்ட காலம் தொடர்ச்சியாக எனது சொந்தப் பணத்தில் நூலகத்திற்கு நான் பத்திரிகைகள் வழங்கியிருந்தேன். நீங்கள் கூறியது போல் மக்களின் இலுபறி காரணமாக தற்போது மூடப்பட்டிருக்கின்றன. அதனை சபை பாரமெடுத்து நூலகத்தினை தொடர்ச்சியாக இயங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற சபையில் பத்திரிகைள் அனுப்பிக் கொண்டிருந்தோம். அவர்களின் கவனயீனத்தினால்தான் அது திறக்கப்படாமல் உள்ளது. மல்வத்தை வளத்தாப்பிட்டி மஜீட்புரம் இவைகளுக்கு வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.முஹம்மட் சஹீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது பராமரிப்பபின் கீழ் இருக்கின்ற விளையாட்டுத் தொகுதியில் அமைந்திருக்கின்ற உப தபாலகம் இன்று பொது மக்களுக்கு நலன் இல்லாமல் அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் அமைந்திருக்கும் ஒரு தபாலகமாக இருக்கின்றது. ஆகவே இந்த தபாலகம் எங்களுடைய வண்டுவாய்க்கால் சந்தியில் அதாவது பொது மக்கள் அதிகம் செறிந்து வாழ்கின்ற பிரதேசத்தில் அமையப் பெற வேண்டும். அவ்வாறு அமையப் பெறாமல் இருப்பதனால்தான், எங்களுடைய சபூர் சனச அவ்விடத்தில் இருக்கின்ற உப தபாலகத்திலும் அதே போன்று பொலிஸ் வீதியில் அமைந்துள்ள தபாலகத்திற்கும் மக்கள் ஆட்டோவில் சென்று தபாலகத்தில் தமது வேலைகளை செய்கின்றனர்.

எனவே, பொது மக்கள் நலன் கருதி மக்கள் செறிவாக வாழ்கின்ற பிரதேசத்தில் கட்டடம் அமைந்திருக்கின்றது. அந்த கட்டடம் இன்று சேதமாக்கப்பட்டும், யாரும் பராமரிக்க முடியாமல் செயலிழந்து காணப்படுகின்றது.

ஆகவே,எமது விளையாட்டரங்கில் அமையப் பெற்றிருக்கின்ற உப தபாலகத்தினை மக்கள் அதிகம் வசிக்கின்ற வண்டுவாய்கால் சந்தியில் அமைந்துள்ள தபாலக கட்டடத்திற்கு மாற்றித்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

சென்நெல் கிராமத்தில் இன்று அடர்த்தியான பற்றை, புதர்களுடன் தனிநபர்களின் காணிகள் இருக்கின்றன. இன்று அவர்களின் காணிகளினால் உயர்தரமான போதை வஸ்துக்கள் விற்பனை செய்யும் நிலையங்களாக அந்தக் காணிகள் அமைந்திருக்கின்றன. அந்தக் காணிகளை சுத்தப்படுத்தாமல் இதுவரைக்கும் அயலில் வாழ்கின்ற மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.இந்த உயர் சபையினூடாக அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

அதே போன்று எங்களது பிரதேச சபைக்கு சொந்தமானசந்தைக் கட்டடத் தொகுதி ஒரு பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றது. அதனை அதிகமான மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தில் அவர்கள் பயனடைகின்ற வகையில் பெண்கள் சந்தை ஒன்றை நிர்மாணிக்க வேண்டிய பொறுப்பும் எங்களுக்கு இருக்கின்றது.ஆகவே மக்கள் அந்த சந்தை வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடியவகையில்அந்த முறைமையை பெற்றுத் தருமாறு இந்த சபையிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்று சம்மாந்துறை மக்கள் இறைச்சியை விலைகூடிய வகையில் பெறுகின்ற போதும், இறைச்சிக் கடையில் அளவைக்காக பயன்படுத்தப்படுகின்ற தராசுகள் உரிய முறையில் இல்லாமல் இருக்கின்றது.இன்று அவர்களது அளவைகள் மிகக்குறைந்த பெறுமானம் கொண்ட இறைச்சிகளைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்களும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்தப்பிரச்சினைகளுக்கு தீர்வு கானும் முகமாக டிஜிடல் தராசுகளை கடை உரிமையாளர்கள் பயன்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்த சபை அதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று உங்களிடம் வினயமாக கேட்டுக் கொள்கின்றேன்.

பொது மக்களின் நலன் விடயத்தில் அக்கரை கொண்டு எனது முன்மொழிவுகளை அங்கீகாரமிக்க ஒரு முன்மொழிவாக ஆக்க வேண்டும் என்று விடை பெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உறுப்பினர் யூசுப் அவர்கள் தபாலகம் தொடர்பான உங்கள் கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உப தபால் அலுவலகங்கள் சம்புமடு காரியாலயங்கள் என்று கூறி உருவாக்கப்பட்டது இன்று அல்மர்ஜான் பாடசாலைக்கு முன்பாக இருக்கின்றது. சென்நெல் கிராமம் உபதபாலகம் என்று உருவாக்கப்பட்டது.இன்னும் செந்நெல்புரத்தில்தான்

இருக்கின்றது.ஆனால் தபால் திணைக்களம் சேவையும், இலாபத்தை நோக்கமாக கொண்டு செயற்படுகின்றது. அதில் கொஞ்சம் கதிக்க சேவையைத்தான் எதிர் பார்கின்றது. அதற்காக வியாபாரம் இல்லாத தபாலகத்தை வைத்திருக்க திணைக்களம் தயாராக இல்லை.

அதன் அடிப்படையில் செந்நெல்புரம் 1,2 என்று இருக்கின்ற காரணத்தினாலும், சம்புமடு தபால் அலுவலகம் இன்றைய நாள் தபால் திணைக்களத்தில் ஊழியர் தொழிற்சங்கத்தில் 22 தொழிற் சங்கங்கள் இணைந்து எமது தொழிற்சங்கமான சிறீலங்கா தப்லஹா விதிலி சந்தேயம சங்கத்தினால் தலைமையின் கீழ் இன்று தொடர் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது நாள். அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நான் அம்பாரை மாவட்ட தலைவராக இருக்கின்ற படியினால் அதனை ஒழுங்கு செய்து விட்டுத்தான் சபைக்கு வந்தேன்.

ஆகவே, இந்த சங்கத்தின் ஊடாக சம்புமடு உபதபால் அலுவலகம்,தபால் அலுவலகமாக தரம் உயர்த்தப்படுவதற்கான நடவடிக்கைகளை கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் நாள் அதற்குரிய எழுத்து மூலமான நடவடிக்கைகள் சங்கத்தின் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. இன்று கிழக்கு மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் காரயாலயத்திற்கும் பிரதேச அஞ்சல் காரியாலயமான, அக்கரைப்பற்று அம்பாரைக் காரியாலயங்களுக்கும் வந்திருக்கின்றது. அதிகாரிகள் அது சம்மந்தமான அறிக்கைகளை தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்ப வேண்டிய நிலையில் இருக்கின்றது. சம்புமடு தபாலகம் தரம் உயர்த்தப்படுவதால், மக்கள் பிரயோசனப்பட வேண்டும். அதுதான் குறிக்கோள்.

செந்நெல்புர உபதபாலகம் அமைந்துள்ள இடம், எதிர்காலத்திலே, இப்பவும் கூட தொழில் சார்ந்த ஒரு பிரதேசமாக, வர்த்தக நிலையங்களானபிரதேசமாக இருக்கின்ற படியினால் அரச நிறுவனங்கள் அங்கு ஸ்தாபிக்கப்பட்டு கொண்டும் இருக்கின்றது. எனவே அந்த நிறுவனங்கள் சென்நெல் கிராம தபாலகத்திற்கு வந்து தமது தபால்களை தபாலிடலாம்.PMAபணம் எடுப்பதற்காக மக்கள் ஆட்டோ பிடித்து வருவது ஒரு கஸ்ட்டமான விடயம். எனவே நல்ல விடயம் எமது வண்டுவாய்க்கால் சந்தியில் சென்னல் கிராமம் உப அஞ்சல் கிராமம் என்ற பெயரில்தான் திறக்க முடியும். அதுதானட திணைக்களத்தினுடைய நடைமுறையாக இருக்கும் என தெழிவு படுத்துகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சம்புமடு தபாலகம் அங்கு போவதற்கு என்ன தடை உள்ளது. சம்புமடு தபாலகம் விளினையடியில் உள்ளது.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
ஒரு தடையும் இல்லை புதிதாக உப அஞ்சல் அலுவலகங்களை நிறுவுவதற்குதிணைக்களம் முன் வராது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சம்புமடு புதிதில்லைதானே?

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
நீங்கள் கேட்பது நியாயமான கேள்வி. ஆனால் ஆனால் சம்புமடு அஞ்சல் அலுவலகத்தின் ஊடாக வருமானம் அதன் யுனிட் கணக்கு அதிகமாக இருப்பதனால் அதனை நாங்கள் தரம் உயர்த்துகின்றோம்.

அதற்குரிய உப அஞ்சல் அலுவலகத்தை தேவை என்றால் அவர் கூறிய இடத்தில் நிறுவுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள் கேட்டிருக்கின்றோம். அது சம்மந்தமான முடிவுகள் சொல்லப்படவில்லை.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபாஅவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இச்சபையின் ஆரம்ப கூட்டத்தின் போது தபால் நிலையத்தையும் சந்தையையும் பற்றித்தான் நான் சமர்ப்பித்திருந்தேன். சம்புமடு என்ற தபாலகத்தை அவ்விடத்தில் கொண்டுவர வேண்டும் என்று அரசியல்வாதிகளையும் உள்ளிட்டுசில பிரச்சினைகளை விளங்கி குடியிருந்த மக்களை அகற்றிவிட்டுத்தான் கட்டடத்தை கொண்டு வந்தார்கள். அந்த இடத்தை அகற்றி இத்தனை வருட காலங்கள் சென்றும், இன்னும், சம்புமடு என்ற இடத்தில் தபாலகம் இல்லாமல் சபூர் சனச என்ற ஒரு சங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்காக இந்த இடத்திலே தபாலகத்தை, வைத்துக் கொண்டு மக்களை அலக்களிப்பது மிகவும் மனவருத்ததத்திற்குரிய விடயமாகும்.

இதனை நான் சபைக்கு வரும் முன் பொதுமக்களாகிய நிலையில் இருந்து கொண்டு, கடிதங்களை அனுப்பி இருந்தேன். இதற்கு அரசியல்வாதிகளும் உள்வாங்கப்பட்டு மறுப்புத் தெரிவித்து அதில் எந்த கண்காணிப்பும் இல்லாமல் விட்டுவிட்டதனால் இன்றும் சம்புமடு தபாலகத்தை ஏன் அந்த இடத்திற்கு கொண்டு வருவதற்கு முரண்பாடு இருக்கின்றது என்பது எனக்கு கவலையாக இருக்கின்றது.

சகோதர உறுப்பினர் சஹீல் அவர்கள் கூறியது போல், மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள். சம்புமடுவில் இருக்கின்றவர்கள் இந்த இடத்தில்தான் பணத்தை எடுக்க வருகின்றார்கள். மலையடிக் கிராமம் எனும் பிரதேசம் பரந்த பிரதேசமாகும். உடங்கா என்பது சுழயஞ்சேனையைச் சேர்ந்த இடம். அந்த இடத்தில் இருக்கின்ற மக்கள் இங்குதான் பணத்தை எடுக்க வருகின்றார்கள். இந்த பணத்தை எடுப்பதற்கு ஆட்டோ பிடிப்பதற்கு வசதி இல்லாமல் கஷ்டப்படுகின்றனர்.இவர்களுக்கு பல அசௌகரயங்களும் ஏற்படுகின்றது.

சம்புமடு எனும் இடத்தில் இருந்துதான் நிதி கூடுதலாக வருகின்றது. நாங்கள் மக்களை எழுப்பிவிட்டு இடத்தையும் கொடுத்துவிட்டு திருடர்களும், கஞ்சா குடிப்பவர்களும் போதைவஸ்துக்கு அடிமையானவர்களும் அந்த இடத்தைபிரயோகித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் அந்த பிரதேச மக்கள் அனைவரும் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர். சிறு பிள்ளைகள் கல்விகற்பதற்கு சிரமப்படுகின்றனர்.

மீண்டும் நான் கேட்டுக் கொள்வது சந்தையையும், தபாலகக் கட்டிடத்தையும் எந்த நிலையிலும் திறக்க வேண்டும் என்றும், அதற்கு எங்களது ஒத்துழைப்பையும் வழங்க இருக்கின்றோம் என்பதையும் கௌரவ தவிசாளர் அவர்களிடம் வேண்டுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே,கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள் இந்த முன்மொழிவினை முன்வைத்ததற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கின்றேன். இந்த விடயம் தொடர்பாக, 2015 ஆம் ஆண்டு கௌரவ அமைச்சர் ஹலீம் அவர்களைச் சந்தித்து, எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன். அது மாத்திரம் அல்ல வளத்தாப்பிட்டியில் இருக்கின்ற உப தபால் அலுவலகத்தையும் திறக்க வேண்டும் என்றும். எனவே இந்த சபை ஒரு தீர்மானமாக நிறைவேற்றி கௌரவ அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுப்பது நல்லது என்று நான் நினைக்கின்றேன். மூன்று விடயங்களையும் உள்ளடக்கியதாக அதாவது சம்மாந்துறை தபாலகத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து, எல்லை வேலிகளைப் போடுவதுடன், சம்புமடு உப தபால் அலுவலகத்தை கட்டடம் இருக்கின்றது ஆனால் அது வேறு இடத்தில் இயங்கிக் கொண்டிருப்பதனால் அதற்குரிய கட்டடத்தில் இடமாற்றம் செய்வதும், வளத்தாப்பிட்டியில் அமைந்திருக்கின்ற உப தபால் அலுவலக கட்டடத்திற்கு புதிதாக ஒரு உப தபால் அலுவலகத்தை திறப்பதற்குமான இம் மூன்று வியங்களையும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது என்று அமைச்சருக்கு அனுப்பி வைப்பது சிறந்தது என்று நான் கூறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த வாரம் கௌரவ தபால் அமைச்சர் அவர்களுடன் உரையாடினேன். அவர் நோன்புப் பெருநாளைக்குப் பிற்பாடு சம்மாந்துறைக்கு விஜயம் செய்ய என்னிடம் உறுதியளித்திருக்கின்றார். அவர் முஸ்லிம் கலாசார அமைச்சராக இருக்கின்ற படியினால் என்னிடம் வேண்டியது சம்மாந்துறையின் ஜம்மியத்துல்உலமா சபை, றெஸ்டிபோட் இவர்களுக்குள்ள பிரச்சினைகளை கௌரவ அமைச்சரோடு பேசுவதற்கான ஒழுங்குகளை செய்யுமாறு என்னிடம் பணித்திருக்கின்றார்.

கௌரவ அமைச்சரிடம் நான் கூறினேன்,தரமுயர்தப்பட இருக்கிற மல்வத்தை உப தபாலகத்தை அஞ்சல் அலுவலகமாக தரம் உயர்த்துகின்றோம். சம்புமடு தபாலகத்தையும் தரம் உயர்த்துகின்றோம். அதே நேரத்தில் அம்பாறை பஸ் ஸ்ட்டான்ட் தபாலகத்தையும் தரம் உயர்த்துகின்றோம். இம் மூன்றும் தரம் உயர்த்தப்படும் போது அவர் அவைகளைத் திறக்குமாறு கூறினேன். அதற்கு அவர் அஞ்சல்மா அதிபரிடம் பேசுவதாககூறியிருக்கின்றார்.

எங்களுக்கு தற்போது ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை சம்புமடு பிரதேசத்திலே மக்கள் அதிகமான வாழ்கின்றனர். அவ்விடத்திற்கு தபாலகம் அமைவது வரவேற்கத்தக்கது. நாங்கள் இதனை சபையினூடாக தீர்மானம் எடுப்போம். தரம் உயர்த்தப்படுகின்ற அஞ்சல் அலுவலகம் வண்டுவாய்காலில் உள்ள கட்டடத் தொகுதியில்நிறுவுமாறும் கேட்டுக் கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சினையை ஒரு தீர்வுக்குக் கொண்டுவரலாம்..

**கௌரவ உறுப்பினர்ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே,தபாலகங்கள் தரம் உயர்த்தப்படும் விடயம் அதிகாரிகள் மட்டத்தில் தான் இருக்கின்றது. ஆனால் மக்களுக்கு பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும். பொது மக்கள் பயன்படுத்தக்கூடியதாக இருந்தால் தரமுயர்துதல், உப தாலகத்தை அமைத்தல் போன்ற இரண்டு விடயங்களும் உடனடியாக இடம்பெற வேண்டும்.மேலும் இடமும் பாதுகாக்கப்பட வேண்டும். யாராவது அவ்விடத்தில் இருந்தால் அவர்களை எழுப்ப முடியாது.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே,தரமுயர்த்தல் அவசியமானதொன்றாகும். அதனை கண்டிப்பாக செய்ய வேண்டும். தரம் உயர்த்தப்படுகின்றபோது அதனை அந்த இடத்தில் நிறுவுவது எல்லாவற்றிலும் விட சாலச்சிறந்தது. தரம் உயர்த்தும் காரியாலையத்தை அமைப்பதற்கு Bus Rood இருக்க வேண்டும். இதனைச் சறப்பாகச் செய்வதற்க பஸ் டிப்போவுடன் கதைத்து ஒரு பஸ் மார்க்கத்தினை கௌரவ தவிசாளர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரிஅவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது வட்டாரத்திற்குள் இருக்கின்ற தபால் நிலையம் மிக நீண்ட நாட்களாக மூடப்பட்டிருக்கின்றது. அதனை திறக்குமாறு மக்கள் முறைப்பாடு செய்கின்றனர்.அதன் அருகில் உள்ள சந்தையை ஒரு தனிநபர் உபயோகிக்கின்றார். இன்னும் கூடுதலான காலங்களுக்கு அவர் இருந்தால் அவர் அதனை எனது கட்டடம் என்று உரிமை கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். மக்கள் ஓம்காட்டை இவ்விடத்தில் இருந்து அகற்றுமாறும் கூறுகின்றனர். சந்தைக் கட்டத்தை வாடகைக்குப் பெறுவதற்கு மக்கள் என்னிடம் கேட்கின்றனர். அல்அர்சத் பள்ளி வீதியையும் சரிசெய்ய வேண்டும். சென்ற 03 ஆந் திகதி தார் ஊற்றப்பட்டது. இப்போது கல் எழும்பி சிதைவடைந்து கிடக்கின்றது.

எங்களது சம்மாந்துறையின் பிரதேச சபைக்கும் நாவிதன்வெளி பிரதேச சபைக்கும் இடையில் உள்ள எல்லையை நிர்னயிக்க வேண்டும். காரணம் நான் ஒரு வட்டானை என்பதனாலும் அங்கு மனல் அகற்றும் நடவடிக்கைகள் அதிகமாகக் காணப்படுகின்றது. ஊரின் வளம் குறைந்துகொண்டே செல்கின்றது. இது பற்றி பொலீஸ் நிலையத்தில் கூறினாலும் ஒரு தீர்வு கிடைப்பதில்லை.சம்மாந்துறைப் பொலீஸ் நாவிதம்வெளி என்கின்றது. நாவிதம்வெளிப் பொலீஸ்

சம்மாந்துறை என்கின்றது. இதற்கு ஒரு தீர்வு பெற்றுத்தர வேண்டும். என்று கௌரவ தவிசாளர் அவர்களை வேண்டுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எவ்லைப்பிரச்சினை ஒரு பாரிய பிரச்சினை.உத்தியோக பூர்வமாக கெசட் பன்னப்பட்டது சம்மாந்துறைப் பிரதேச சபையின் எல்லை முருகண்டி.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் யூசுப் அவர்கள் கூறியது போல், தற்போது சம்புமடு உப தபால் அலுவலகம் தபாலகமாக தரம் உயர்த்தப்பட்டால் வெற்றிடம் ஒன்று ஏற்படுகின்றது. தற்போது இருக்கின்ற நிலையில் இலங்கையில் எந்த ஒரு இடத்திலும் புதிதாக உப தபால் அலுவலகங்கள் திறக்க முடியாது. உப தபாலகம் மூடப்பட வேண்டும் அல்லது நடைமுறையில் இருக்கும் உப தபாலகம்,தபாலகமாக தரம் உயர்த்தப்படும் போதுதான் அந்த வெற்றிடத்திற்கு உப தபாலகத்தை திறக்கலாம். ஆகவே,சம்புமடு உப தபாலகம் தரம் உயர்த்தப்பட்டால் வண்டு வாய்காலில் இருக்கின்ற வெற்றிடத்திற்கு உப தபாலகத்தை பயன்படுத்த முடியும் என்று குறிப்பிட்டு நாங்கள் கூற வேண்டும். அம்பாரையில் உப தபாலகம் தாபாலகமாக தரம் உயர்த்தப்படும் போது வளத்தாப்பிட்டியில் கொண்டு வருவதற்கு குறிப்பிட்டு இரண்டு இடங்களையும் குறிப்பிட்டுக் கூறி சபை தீர்மானம் எடுத்து உரிய அமைச்சருக்கு அறிவித்தால் நடைமுறைச் சாத்தியமாகும் என்பது எனது கருத்து.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் யூசுப் அவர்கள் கூறினார்கள் மல்வத்தை உப தபாலகம் தபாலகமாக தரம் உயர்த்தப்படும் போது அதனை எமது வளத்தாப்பிட்டியில் ஒரு உப தபாலகமாகஅமைக்கலாம் என்பதையும் நான் குறிப்பிடுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களுக்குத் தெரியுமோ,தெரியாதோ நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் போது 2010 ஆம் ஆண்டு தபாலகம் புதுக்கட்டடத்திற்கு 20Millionரூபா ஒதுக்கப்பட்டது. அதுநடைமுறைப்படுத்தப்படவில்லை. சம்மாந்துறை தபாலகத்திற்கு புதிதாக கட்டடம் அமைக்க வேண்டும். இது தொடர்பாக கௌரவ அமைச்சர் இதனை செய்து தர வேண்டும். இன்று காணப்படுகின்ற கட்டடம் மிகவும் பழைமைவாய்ந்த கட்டடமாகக் காணப்படுகின்றது. தற்போதைய தபாலகம் அமைந்துள்ள இடம் பெரிய வளாகம்.அங்கு பாரிய கட்டடம் அமைக்கமுடியும். என்றும் சம்புமடு தபாலகம் தரம் உயர்த்துவதனால் வரும் வெற்றிடத்திற்கு நமது வண்டுவாய்க்காலில் இருக்கும் தபாலக கட்டடத்திற்கு ஒரு உப தபாலகம் திறக்கப்பட வேண்டும் என்றும். மல்வத்தை தரம் உயர்த்தப்படுவதால் வளத்தாப்பிட்டிக்கு ஒரு உப அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்று ஒரு சபைத் தீர்மானம் எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
அத்துடன் 2015 ஆம் அன்று தற்போது இருக்கின்ற கௌரவ அமைச்சர் ஹலிம் அவர்களிடத்தில் அம்பாறை கச்சேரியில் தயாரிக்கப்பட்ட ஒரு திட்ட பிரேரணை என்னால் முன்வைக்கப்பட்டது.11Million.1 கோடி 10 இலட்சம் பெறுமதியான ஒரு கட்டடம்.அதாவது அவர்கள் அறிவுரை கூறினார்கள். புதிதாக ஒரு கட்டடம் அமைக்க முடியாது. இருக்கின்ற கட்டடத்தை திருத்துவதற்கென்று ஒரு பிரேரனையைக் கொண்டுவந்து தாருங்கள் என்று,11Millionகான பிரேரனை சமர்ப்பிக்கப்பட்டு அவர்களிடம் இருக்கின்றது. அதனையும் சுட்டிக்காட்டி இந்த 3 விடயங்களையும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கலாம் என்று கோருகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Proposalலை நாம் 3 பேரும் எடுத்துச் செல்வோம்.

**தீர்மானம் 17**

சம்புமடு தபாலகம் தரம் உயர்தப்படுவதனால் ஏற்படும் வெற்றிடத்திற்கு வண்டு வாய்கால் சந்தியில் அமைந்துள்ள தபாலக கட்டடத்தில் உப தபாலகம் திறப்பதற்கும் மல்வத்தை தபாலகம் தரம் உயர்த்தப்டுவதனால் வளத்தாப்பிட்டியில் ஒரு உப தபாலகம் அமைப்பதற்கு தபால் அமைச்சுக்கு சிபார்சு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தபால் திணைக்களம் மிகவும் சட்டரீதியாக செயற்படுகின்ற ஒருநிறுவனம். அம்பாறை Bus Standஉப தபாலகம் தரம் உயர்த்தப்படும் போது அதனை எடுக்கலாம். ஆனால் நாம் அக்கரைப்பற்று தபாலகத்தில் இருக்கின்றோம். இரண்டிற்கும் ஒருதபால் அத்தியட்சகர் தான் இருக்கின்றார். ஆகவே இதனை மிகவும் இலகுவாக பெறலாம் தரம் உயர்த்தப்படுகின்ற போது அஞ்சல் அலுவலகமாக வண்டுவாய்க்காலில் உள்ள கட்டடத்திற்கு செல்ல வேண்டும் என்பது எனது கோரிக்கை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் வர்த்தக ரீதியில் பார்க்கும் போது, தான் இந்த சிக்கல்கள் வருகின்றது.நான்பாராளுமன்றத்தில் ஒரு பிரேரனையை முன்வைத்தேன்PMA 100ரூபா பணத்தை ஏன் தபால் காரர் மூலம் வீடுகளுக்குச் சென்று கொடுக்க முடியா? என்று.

பிரதேச சபை சட்டத்தின் கீழ் பராமரிப்பின்றிக் கானப்படும் காணிகளின் உரிமையாளர்கள் எல்லோருக்கும் அறிவித்தல் மூலம் தெரிவிக்கப்பட வேண்டும்.

**தீர்மானம் 18**

இறைச்சிக் கடைகளுக்கு டிஜிட்டல் தராசுகள் வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதனை நாம் வர்த்தக அமைச்சர் மூலமாக பெற்றுக் கொள்வதற்கு நாம் ஒரு முயற்சி எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர்ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
பெருநாள் காலங்களில் வருகின்ற நடைபாதை வியாபாரிகளிடம் குறைந்த கட்டணத்தை அறவிட வேண்டும்.வியாபாரம் செய்வதை விட அதிகளவான தொகை அறவிடப்படுகின்றது.இது அனியாயமான ஒரு அறவீடு. எனவே குறைவான அறவீடு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.முஹம்மட் சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற அமர்வில் நாங்கள் கூடி தீர்மானம் எடுப்பதாக ஒரு முடிவை எட்டினோம்.அது தான் எங்களது அங்காடி வியாபாரிகளின் வியாபரர நிலை சம்பந்தமாக. குறிப்பாக நேற்று முன் தினம் கூட அங்காடி வியாபாரிகள் எங்களுடைய சந்தை கட்டடத்தில் இருந்து விளினையடி சந்திவரையும் பாதையோரங்களிலும் வியாபாரங்களைச் செய்கின்றனர். அதனால் பாரிய விபத்துக்கள் இடம் பெறுகின்றன. மஞ்சள் கடவை முன்னாலும் வியாபாரம் செய்கின்றார்கள். இதனை நாங்கள் உரிய முறைப்படி அங்காடி வியாபாரிகளின் வியாபாரங்களை மட்டுப்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனவே இதற்கான ஒழுங்கு முறையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று வினயமாய் வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அங்காடி வியாபாரிகள் தொடர்பாக அடுத்த அமர்வில், இதற்கான புதிய அணுகுமுறையை எடுக்க வேண்டும். பொது மார்க்கட்டை டென்டர் எடுத்து, வியாபாரிகள் ஒவ்வொரு நாளும் முறைப்பாடுகளைக் கொண்டுவருகின்றனர். இவர்களது அணுகு முறைகள் பற்றி, இது சபைக்கு வருமானமானாலும் இதனை விட சபைக்கு அபகீர்தியை ஏற்படுத்துகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்காக அடுத்த வருடத்திலிருந்து இதற்கு புதிய அணுகுமுறையை எடுக்க வேண்டும்.

வாரச் சந்தைகள் ஆரம்பித்தால், இப்பிரச்சினைகள் குறைவடையும்.சம்புமடு கைகாட்டிச்சந்தி கொச்சிக்காய்தூளர்ர சந்தி என ஆரம்பித்தால் இப்பிரச்சினை குறைவடையும்.அந்தச் சந்தையில், திறந்தவெளி சந்தையில் வியாபாரம் செய்பவர்களுக்கு எந்தசந்தப்பமும் வழங்கப்படமாட்டாது. அதனை சபையினால் ஆரம்பித்து சபையின் பொறுப்பில் வரும். அதற்கு அறவீடு இருக்காது.Open மார்கட் என்பது மார்கட்டை சுற்றி இருப்பது மட்டும்தான். இன்ஷாஅல்லாஹ் அடுத்த வாரம் இதனை செய்வோம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
வளத்தாப்பிட்டியில் மீன் வியாமாரிகளிடமும் கட்டனம் அறவிடுகின்றனர்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வளத்தாப்பிடியில் உள்ள சந்தையையும் பயன்படுத்துங்கள்.தற்போது சைக்கிள் கடை மட்டுமாவது நடக்கின்றது.

கௌரவ அங்கத்தவர்கள் எல்லோரும்,பொது இடங்களைப் பராமரிப்பதில் அக்கரை கொள்ள வேண்டும். தவிசாளர் மட்டும் பார்க்க வேண்டும் என்றில்லாமல் அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

வழத்தாப்பிட்டியில் உள்ள சிறுவர் பூங்கா, சந்தை போன்றவற்றைத் திருத்தி வாடகைக்கு கொடுக்கக்கூடியவாறு இருந்தும் அதனைப் பராமரிக்கவில்லை. எனவே பொது இடங்களை உறுப்பினர்கள் பராமரிக்க வேண்டும். ஏனென்றால் உங்களுக்கு அதற்குரிய அதிகாரம் உள்ளது. ஒவ்வொரு வாரத்திற்கும் அந்தந்த வட்டாரத்திற்குள் சிரமதானம் செய்து வந்தால் நமது பிரதேசம் சுத்தமடைவதுடன் புத்தனர்வுடன்கூடிய நல்லெண்ணமும் உருவாகும்.

இதனைச் சொன்னவனாக, மீண்டும் இந்த சபை இன்று தாமதமாக ஆரம்பித்ததற்காகவும் அறிக்கையில் ஏற்பட்ட குளர் பாடுகளுக்கும் மன்னிப்புக் கேட்டவனாக, இந்த சபையின் அமர்வு இனிதே முடிகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.